# அழைப்புப்பணி - அவசியமும், அனுகுமுறையும்

- அபூ ஆஸியா, ஃபுர்கான் பப்ளிகேஷன்ஸ் ட்ரஸ்ட் வெளியீடு

---

- அழைப்புப்பணி முஸ்லிம்களின் கடமை
- அழைப்பாளனின் அனுகுமுறை
    - நிராகரிப்போர் (காஃபிர்கள்) யார்?
    - எப்பிரிவினரிடம் அழைப்புப்பணியை மேற்கொள்வது?
    - அழைப்பாளனின் அவசியப் பண்பு.
- அழைப்புப் பணியின் வகைகளும் அனுகுமுறைகளும்.
    - கொள்கை வழி அனுகுமுறை
    - குலையாத கொள்கைப் பிடிப்பை ஏற்படுத்துதல்.
    - அழைப்புப்பணியின் வகைகளும் அதன் அனுகூலங்களும்.
    - இரு வகைகளில் பெரும் பலன் கிட்டும் அழைப்பு வழி.
    - இலகுவான அழைப்பு முறையும், அதன் வகைகளும்.
- விளக்கவுரையை அமைத்துக் கொள்ளும் விதம்
    - அறிமுக உரை - அதன் அடிப்படையும், கால அளவும்.
    - தவறான எண்ணங்களைக் களைதல்.
- விமர்சனங்களும் விளக்கங்களும்
    - விளக்கத்தை அளிக்கும் முன் செய்யும் விவேகச் செயல்.
    - விமர்சனங்களின் பட்டியல்.
    - அறிவார்ந்த விளக்கமும் அமைதியாக இருத்தலும்.
- இஸ்லாத்தின் பக்கம் அழைத்தல்.
    - நன்மையைக் கூறி தீமையைத் தடுத்தல்.
    - ஏகத்துவத்தை பிற மதத்தினரிடம் அறிமுகப்படுத்தும் வழி.
    - அழைப்புப்பணி பலனளிக்காத நிலையில்:
    - கிறிஸ்தவர்களிடம் ஓர் இறைக் கொள்கையைப் பற்றி விவாதிக்க.
    - தவறான அழைப்பு முறையும் - தக்க ஏற்பாடு
- சத்திய அழைப்பு இல்லையேல் அழிவு

## அழைப்புப் பணியின் அவசியமும் அனுகுமுறையும்:

எவர் அல்லாஹ்வின் பால் (மக்களை) அழைத்து (ஸாலிஹான அமல்) நல்ல செயல்களை செய்து ‘நிச்சயமாக நான் (அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிபட்ட) முஸ்லிம்களில் நின்றும் உள்ளவன்‘ என்று கூறுகிறாரோ, அவரை விட சொல்லில் அழகியவர் யார்? (அல்குர்ஆன் 41:33)

மனிதன் இந்த பூமியில் பேசக்கூடிய வார்த்தைகளில் மிகவும் மேலான வார்த்தைகள், மக்களை அல்லாஹ்வின் மார்க்கத்தின் பால் அழைப்பதாகும். இறைவன் கூறுகிறான். (அஸ்ர் அத்தியாயத்தில்)

“காலத்தின் மீது சத்தியமாக! நிச்சயமாக மனிதன் நஷ்டத்திலிருக்கிறான். இறை நம்பிக்கை (ஈமான்) கொண்டு, நற்செயல்கள் செய்து, சத்தியத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் பொறுமையுடன் உபதேசித்தும் கொள்கிறாரே அத்தகையோரைத் தவிர, (இவர்கள் நஷ்டத்தில் இல்லை) (அல்குர்ஆன் 103:1-3)

இவ்வாறு இறைவன் கூறுவதிலிருந்து அழைப்புப் பணியானது முஸ்லிம்கள் மீது விதிக்கப்பட்ட கட்டாயக் கடமையாகும் என்று விளங்குகிறது.

ஒரு முஸ்லிமிற்கு (இபாதத்) வழிபாடு எப்படி கடமையாகிறதோ, அது போன்றே (தஃவத்) அழைப்புப் பணியும் கடமையாகி விடுகிறது. எனினும் இன்றைய முஸ்லிம்களிடம் அழைப்புப்பணி என்பது மறந்து விட்ட ஒரு கடமையாகி விட்டது.

நபி(ஸல்) அவர்கள், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தன் இறுதிப் பேருரையின் போது, “நான் உங்களுக்கு இறைவனின் மார்க்கத்தை எடுத்துரைத்து விட்டேன் அல்லவா?“ என்று கேட்கிறார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் எடுத்துரைத்து விட்டீர்கள்! என்று இறை நம்பிக்கையாளர்கள் பதிலுரைத்த போது நபி(ஸல்) அவர்கள் ‘இறைவா! இதற்கு நீயே சாட்சி‘ என்று இறைவனை சாட்சியாக்கினார்கள். தொடர்ந்து தம்முன் குழுமியிருந்த இறை நம்பிக்கையாளர்களை நோக்கி, ‘என்னிடமிருந்து பெற்றுக் கொண்டது சிறு விஷயமாக இருந்தாலும் அதை எடுத்துச் சென்று எட்டாத மக்களுக்கு எட்டச் செய்யுங்கள்‘ என்றார்கள்.

அன்று அண்ணல் நபி(ஸல்) அவர்களின் இறுதி உரையைச் செவி மடுத்தவர்கள் லட்சத்திற்கும் மேற்பட்டவர்களாக இருந்தார்கள். அவர்களில் பிறமதத்தினருக்கு சத்தியத்தை எடுத்துரைப்பதற்காக தம் சொந்த நாட்டை விட்டு சென்றவர்கள் பலர். சொந்த நாட்டில் மரணித்தவர்கள் சிலரே! பெரும்பாலான இறைநம்பிக்கை யாளர்கள் அழைப்புப்பணி செய்து கொண்டிருந்த நிலையில் அந்நிய நாட்டிலேயே மரணித்தனர் என்பதிலிருந்து அழைப்புப்பணிக்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவம் எத்தகையதாக இருந்தது என்பதை நாம் அடிமனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

இறைத்தூதர் ஒப்படைத்த அழைப்புப்பணி அவர்களைப்பின்பற்றும் அனைவரின் மீதும் அவரவர் தகுதிக்கு ஏற்ற வகையில் கடமையாக்கப் பட்டுள்ளது, இன - நிற - கண்டம், நாடு, மொழி பாகுபாடின்றி சத்தியபிரச்சாரம் செய்ய வேண்டியது முஸ்லிம் சமூகத்தின் மீதுள்ள கடமையாகும்.

மனதையும் உடலையும் அர்ப்பணித்து, சொல்லாலும் செயலாலும் இந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். சத்திய இஸ்லாத்தை அதனுடைய முழுமையான வடிவத்தில் எவ்வித மாற்றம், திருத்தம் இல்லாமல் மக்கள் முன் சமர்ப்பிக்க வேண்டும்.

அழைப்பாளனின் மனதில், ‘அழைப்புப்பணி என்னுடைய கடமையாகும். மறுமையில் இது குறித்து நான் விசாரணை செய்யப்படுவேன். என்னுடைய சமூகத்தின் முன் நின்று நான் இப்பணியைச் செய்யவில்லையென்றால், அதற்காக நான் இறையின் முன் குற்றஞ்சாட்டப்படுவேன்!‘ என்னும் அச்ச

உணர்வு இருக்க வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக அப்படியொரு கடமை தமக்கு வசதியாக இருப்பதை பலர் மறந்துவிட்டார்கள். மறந்தால் கூட பரவாயில்லை நினைவூட்டிக் கொள்ளலாம். ஆனால் அதனை மறுக்கின்றனர். அதுவும் மார்க்க அறிஞர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் இக்கடமையை மறுப்பதைப் பார்க்கும் பொழுது தான் மிகுந்த வேதனையாக இருக்கிறது.

நபி(ஸல்) அவர்கள் குரைஷித்தலைவன் உபை இப்னு கல∴ப் என்பவரிடமும் இஸ்லாத்தை எடுத்துவைத்து விளக்கிக் கொண்டிருந்தபோது, இப்னு உம்மி மக்தூம்(ரலி) என்னும் கண் பார்வையற்ற நபித்தோழர் நபி(ஸல்) அவர்களிடம் சில மார்க்க விளக்கம் கேட்கவந்தார். அப்போது நபி(ஸல்) அவர்கள் முகம் கடுகடுப்பாக மாறியது. இச்செயலைக் காணச் சகியாத இறைவன், தன் திருத்தூதரைக் கண்டித்து திருமறை வசனத்தை இறக்குகிறான். "அவர் கடுகடுத்தார், மேலும் (முகத்தைத்) திருப்பிக்கொண்டார். அவரிடம் அந்த பார்வையற்றவர் வந்தபோது, (நபியே! உம்மிடம் வந்த அவர் தூய்மையாகி விடக்கூடும் என்பதை நீர் அறிவீரா? அல்லது அவர் (உம் உபதேசத்தை) நினைவுபடுத்திக் கொள்வதன் மூலம் (உம்முடைய) உபதேசம் அவருக்குப் பலனளித்திருக்கலாம். உம் உபதேசத்தின்) தேவையை எவன் அலட்சியம் செய்கிறானோ, அவன் பக்கமே நீர் முன்னோக்குகின்றீர். ஆயினும் (இஸ்லாத்தை ஏற்று) அவன் தூய்மையடையாமல் போனால், உம்மீது (அதனால் குற்றம்) இல்லை. ஆனால் அல்லாஹ்வுக்கு அஞ்சியவராக. எவர் உம்மிடம் விரைந்து வந்தாரோ அவரை விட்டும் பாராமுகமாய் இருக்கின்றீர் (திருக்குர்ஆன் 80: 1-10) என்று இறைவன் கூறுகிறான். ஒரு முஸ்லிம் தம்மை நாடி இஸ்லாத்தை குறித்து அதிக விளக்கம் பெற வந்த போது அதனை உதாசீனப்படுத்திவிட்டு, ஒரு முஸ்லிமல்லாதவருக்கு இஸ்லாத்தை எடுத்து வைக்க அதிக முக்கியத்துவம் கொடுத்த அண்ணல் நபி(ஸல்) அவர்களை அல்லாஹ் கண்டிக்கிறான். ஆகவே இவ்வசனத்திலிருந்து (த∴வா) ஒரு கட்டாயக்கடமையல்ல (தர்பிய்யா) தான் முக்கியம். "லா இக்ராஹ ∴பித்தீன்" மார்க்கத்தில் (எவ்வித) நிர்பந்தமுமில்லை (திருக்குர்ஆன் 2:256) எனவே இஸ்லாத்தின் பக்கம் அழைக்க வேண்டும் என்றில்லை. அவரவர் மார்க்கத்தில் அவரவர்கள் இருந்துவிட்டுப் போகலாம். "லகும் தீனுக்கும் வலியதீன்" உங்களுக்கு உங்களுடைய மார்க்கம், எனக்கு என்னுடைய மார்க்கம் (திருக்குர்ஆன் 109:6) என்று கூறிவிடுமாறு அல்லாஹ்வே கூறுகிறான். ஆகவே, அழைப்புப்பணி கடமையாகாது."

இப்படிக் கூறும் மார்க்க அறிஞர்களும் நம் சமுதாயத்தில் உண்டு. அழைப்புப்பணியை வலியுறுத்தும் இறைவசனமும் நபிமொழிகளும் ஏராளம் இருக்க, வேறு காரணங்களுக்காக இறக்கப்பட்ட இறைவசனங்களை இங்கே கொண்டு வந்து இணைத்து அழைப்புபணியை மறுக்கும் இவர்களும் இஸ்லாத்தை நேசிக்கக் கூடியவர்கள் தாம்.

இத்தகையவர்களிடம், "நீங்கள் அல்லாஹ்வை எப்படி நேசிக்கின்றீர்கள்?" என்று கேட்டால், அவர்கள் கூறுவார்கள். "தாய் தகப்பனை விட, மனைவி மக்களை விட, சகோதர, சகோதரிகளை விட அதிகமாக நேசிக்கிறோம்" என்று கூறுவார்கள்.

நீங்கள் வீட்டில் இல்லாத நேரம் உங்களுடைய தாயையோ, மனைவியையோ, சகோதரியையோ, மக்களையோ, அண்டை வீட்டார் தரக்குறைவாக விமர்சிக்கவோ, திட்டவோ, அவதூறு கற்பிக்கவோ செய்தால், விஷயம் கேள்விப்பட்ட நீங்கள் என்ன செய்வீர்கள்? 'எப்படி என் தாயை பேசலாம்?' என்று சண்டையிட வீதிக்கே வந்துவிடுவீர்கள். ஏன்? நீங்கள் நேசிக்கும் உங்கள் மனைவியை சகோதரியை தாயை பிறர் பழித்துப்பேசுவதை உங்களால் ஜீரணிக்க முடியவில்லை. அதனால் சண்டைக்கு தயாராகி விடுகிறீர்கள்.

உங்கள் தாயை விட, மனைவியை விட, மக்களைவிட அதிகமாக அல்லாஹ்வை நேசிப்பதாக கூறும் நீங்கள், அல்லாஹ்வின் மீது களங்கம் சுமத்தும் போது, உணர்வற்று இருப்பது ஏன்? அல்லாஹ்வுக்கு மகன் உண்டு. அவன் ஒன்றல்ல மூன்று ஆகும். அவன் மனிதனாக அவதாரம் எடுத்து வருகிறான் என்றெல்லாம் ஏக இறைவனுக்கு களங்கம் சுமத்தும் மதவாதிகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டாமா? அவர்கள் அறிந்தோ, அறியாமலோ இறைவனுக்கு களங்கம் சுமத்தினாலும், 'அதை விட்டு நீங்கிக்கொள்ளுங்கள், இறைவனை தரம் குறைந்தவனாக கருதாதீர்கள்' என்றாவது கூறவேண்டாமா? திருமணம் ஆகாத சகோதரிக்கு குழந்தை உண்டு என்று அவதூறு கூறுவதை சம்த்துக் கொள்ளாத நாம், ஏக இறைவனுக்கு மகன் உண்டு என்று அவதூறு கற்பிப்பதை சம்த்துக் கொள்கிறோம் என்றால் அது எப்படி இறைவனை நேசித்ததாகும்?

"அர்ரஹ்மான் (தனக்கென) ஒரு குமாரனை எடுத்துக் கொண்டுள்ளான்" என்று அவர்கள் கூறுகிறார்கள். நிச்சயமாக நீங்கள் அபாண்டமாக (ஒரு கூற்றைக்) கொண்டு வந்திருக்கிறீர்கள். இவர்களின் இந்தக் கூற்றினால் வானங்கள் வெடித்து பூமி பிளந்து, மலைகள் சிதறுண்டு விடும் போலும், அவர்கள் அர்ரஹ்மானுக்கு (இறைவனுக்கு) ஒரு குமாரன் உண்டென்று தாவாச் செய்வதினால், ஒரு குமாரனை எடுத்துக் கொள்வது அல்லாஹ்வுக்குத் தேவையில்லாதது. ஏனென்றால், வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொருவரும் அர்ரஹ்மானிடம் அடிமையாய் வருபவரேயன்றி வேறில்லை." (திருக்குர்ஆன் 20:88-93)

"அவன் (எவரையும்) பெறவுமில்லை எவராலும் பெறப்படவுமில்லை" (திருக்குர்ஆன் 112:3)

என, தாங்களும் உணர்ந்து ஏற்று, உலகுக்கும் உணர்த்த வேண்டிய முஸ்லிம்கள், அறிஞர்கள் இப்பணி தங்களுக்குக் கடமையில்லையென வாதிட்டால், இவர்கள் உண்மையிலேயே இறைவனை நேசித்தவர்களாக இருக்க முடியுமா?

முஸ்லிம்களே, பலர் வழிகெட்டு கிடக்கிறார்கள். முதலில் முஸ்லிம்களைத் திருத்துவோம். அதன் பின் முஸ்லிமல்லாதவர்கள் பக்கம் போவோம் என்பதாக. மற்றொரு சாரார் கூறுகிறார்கள்:

ஒரு கட்டிடத்தின் உச்சி தளத்தில் பல குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கின்றனர், ஒரு குழந்தை தவறி விழப்போகும் போது ஓடிச் சென்று, வெளியில் தடுத்து நிறுத்த முன்வராமல், என் குழந்தை, என் உறவுக்காரக்குழந்தை தவறிவிழப்போனால் மட்டுமே காப்பாற்றுவேன் என்று கூறுபவரைப் பற்றி என்ன சொல்வோம்? கொடூரக்காரன், அநியாயக்காரன், பாவி என்று தானே..? அப்படியிருக்க முஸ்லிம்களை மட்டும் நரகநெருப்பிலிருந்து காப்பாற்ற முன்வருவேன். முஸ்லிமல்லாதவர்கள் எக்கேடு கெட்டுப்போனாலும் கவலையில்லை என்று கருதுவதும் பாவம் தானே!

நம் வீடு தீப்பிடித்து எரிகிறது என்றால் முதலில் நம்வீட்டுத் தீயை அணைக்க வேண்டும். பின்பு அடுத்தவீட்டுத் தீயை அணைக்க வேண்டும். ஊரே தீப்பிடித்து எரியும் போது நம் வீட்டுத் தீயை மட்டும் அணைத்துவிட்டு அமைதியாக இருப்போமானால் கோரத் தீ நம் வீட்டையும் விட்டுவைக்காது.

" நீங்கள் நல்லதை செய்ய ஏவுகிறீர்கள் தீயதை விட்டும் தடுக்கின்றீர்கள், அதனால் மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமூகத்தில்) சிறந்த சமூகமாக நீங்கள் இருக்கிறீர்கள்." (திருக்குர் ஆன் 3:110)

என்று இறைவன் கூறுகிறான். நன்மையை ஏவுவதும் தீமையைத் தடுப்பதும் சொந்த சமூகத்துக்குள் மட்டும் என்றிருந்தால், எப்படி மற்ற சமூகத்தோடு ஒப்பிடாமல் முஸ்லிம்களைச் சிறந்த சமுதாயமென இறைவன் கூற முடியும்?

முஸ்லிம்களை சீர்திருத்திவிட்டு, முஸ்லிமல்லாதவர்களை சத்திய இஸ்லாத்தின் பக்கம் அழைப்போம் என்றிருப்போமானால், நிச்சயமாக நம்முடைய ஆயுளில் அதைச் செய்திட முடியாது.

நபி(ஸல்) அவர்கள் காலத்தில் இஸ்லாத்தை விளங்கி ஏற்ற முஸ்லிம்களில் சிலர், தொழுகையில் பேணுதல் இல்லாமல் இருந்தார்கள். “எனது உயிர் எவனது கரத்திலிருக்கிறதோ அந்த அல்லாஹ்வின் மீது ஆணையாக! விறகுகளைக் கொண்டு வருமாறு நான் கட்டளையிட்டு, அதன்படி விறகுகள் கொண்டு வரப்பட்டு, பின்னர் தொழுகைக்கு அழைக்குமாறு நான் உத்தரவிட்டு அதன்படி அழைக்கப்பட்டு, பின்னர் ஒருவரை மக்களுக்கு தொழவைக்குமாறு கட்டளையிட்டு அதன்படி அவர் தொழுகை நடத்தி, பின்னர் தொழுகைக்கு வராமலிருக்கிற ஆண்களின் வீடுகளுக்குச் சென்று, வீட்டோடு அவர்களை எரிப்பதற்கு நான் நினைத்ததுண்டு, (புகாரி) என்று நபி(ஸல்) அவர்கள் முஸ்லிம்களை எச்சரிக்கையும் செய்கிறார்கள். அத்துடன் மற்றவர்களுக்கு சத்தியத்தை எடுத்தும் வைக்கிறார்கள். முதலில் மதீனா முஸ்லிம்கள் அனைவரையும் சீர்திருத்திவிட்டு, பிறகு வெளிநாட்டு மக்கள் பக்கம் போவோம் என்றிருந்தால் நம் பாரத நாட்டிற்கு இஸ்லாம் எட்டியேயிருக்காது.

ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் மத்தியில் சீர்திருத்தமும் முஸ்லிம்கள் அல்லாதவர்கள் பக்கம் அழைப்புப்பணியும் செய்ய வேண்டும். சிலர் முஸ்லிம்கள் மத்தியில் செய்யும் ஒழுங்குமுறையை (தர்பியாவை) தஃவா என்று சொல்வதுண்டு. தஃவா என்றால் அழைப்பு. இஸ்லாத்தை ஏற்காதவர்களின் பக்கம் விடுவதே அழைப்பு ஆகும்.

இஸ்லாம் வலியுறுத்தும் ஐம்பெரும் கடமைகளில் தஃவாஇல்லையே என்று கூறுவதுண்டு. உண்மையில் இஸ்லாம் கூறும் ஐம்பெரும் கடமைகளும் ஈமானை வலுப்படுத்துவதற்காக ஆகும். தஃவா எனும் அழைப்புப்பணி என்பது சத்தியம் எதுவென்று அறிந்தோமோ அதை உடனே பிறருக்கு எடுத்துரைக்கும் முதற்கட்ட கடமையாகும். இறை தூதர்(ஸல்) அவர்கள் தொழுகை, நோன்பு போன்ற கடமைகளை அமல்படுத்துவதற்கு முன்பே செய்த கடமை அழைப்புப்பணியாகும்.



## நிராகரிப்போர் (காஃபிர்கள்) யார்?

எந்த சமுதாயத்திற்கு அழைப்புப்பணி செய்யவேண்டுமோ அந்த சமூ கத்தை முதற்கண் அழைப்பாளன் நேசிக்க வேண்டும்.

சத்தியம் என்னவென்றே அறியாத மாற்றுக்கொள்கையுடையவர்களை, நம் கொள்கைக்கு முரண்பட்டவர், நம்மிடமிருந்து விலம்நிற்பவர், அன்னியர் என்றோ, அணுகத்தகாதவர் என்றோ கருதக்கூடாது. கடுகளவும் வெறுப்பின்றி அவர்களையும் நம் சொந்த சமூகமாகவே கருத வேண்டும்.

எல்லா இறைத்தூதர்களும் தம்முடைய சமூகத்தின் முன் நின்று அழைப்புப்பணி செய்தபோது யா கவ்மி! என் சமூகத்தாரே! என்றே அவர்களை அழைத்தார்கள்.

இறை நம்பிக்கையற்றவர்களே! நீங்கள் இறைவனை நம்புங்கள். பல தெய்வக் கொள்கையுடையவர்களே! நீங்கள் ஏக இறைவனை மட்டுமே வணங்குங்கள், என்று தூதர்கள்

அவர்களை அழைத்து உபதேசித்திருந்தால் அது உண்மைக்குப் புறம்பானதல்ல. ஏனெனில், அவர்கள் இறை நம்பிக்கையற்றவர்களாக பல தெய்வநம்பிக்கையுடையவர்களாகத்தான் இருந்தார்கள். எனினும் தூதர்கள் அனைவரும் அவர்களை, 'என் சமூகத்தாரே! மனிதர்களே! வேதமுடையவர்களே! யூத மதத்தை ஏற்றவர்களே!' கிறிஸ்தவத்தை ஏற்றவர்களே!' என்றே அழைத்தனர்.

நம்முடைய பாரத நாட்டில் இஸ்லாம் என்றால் என்னவென்றே அறியாத மாற்றுக் கொள்கையுடைய மக்களை 'யா கவ்மி' என்னுடைய சமுதாயமே! என்று அழைத்து சத்தியத்தை எடுத்துவைக்கும் மனநிலை நம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். இல்லையென்றால் அந்த மனநிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். அப்போது தான் நாம் இஸ்லாத்தை எடுத்துரைத்திடும் அழைப்புப்பணியை முறையாக நபி வழியில் செய்தவர்களா வோம்.

நம்முடைய நாட்டில் 'கவ்மி' என்றால் அரபுப் பெயர்கள் கொண்ட ஒரு மனித கூட்டத்தையே நாம் கற்பனை பண்ணி வைத்திருக்கிறோம். ஒரு பெயரைக் கொண்டும், அடையாளத்தைக் கொண்டும், தொழாத, ஜகாத் கொடுக்காத, இஸ்லாமிய கடமைகள் எதுவும் செய்யாத, ஈமான்கூட இல்லாத இஸ்லாமிய சமுதாயப் போர்வையில் நிற்கும் ஒருவனிடம் காட்டும் நெருக்கம் கூட அறியாமையிலிருக்கும் பிறமதத்தவர்களிடம் முஸ்லிம்கள் காட்டுவது அரிது. இன்னும் பிறசமூகத்தினரை 'காஃபிர்' என்னும் முத்திரை குத்தி, புறந்தள்ளி வைத்து வருகின்றோம். இதன் பொருள் இறைமறுப்பாளர் என்பதுதான். இருந்தாலும் 'காஃபிர்' எனும் வார்த்தையைக் கேட்கும் பிறசமூகத்தினர் ஏதோ கேவலமான வார்த்தைகள் போலும் என எண்ணுவதற்கு வாய்ப்பு உள்ளது. இதுபோன்று பேசுதல் தவிர்க்கப்படவேண்டும்.

இஸ்லாமிய சமூகத்தில் பிறந்து, இஸ்லாமிய சூழ்நிலையில் வளர்ந்து, முஸ்லிம் குடும்பமாக வாழ்ந்து, இஸ்லாத்தை விட்டு வெளியேறி இறைவனை மறுப்போரும் உள்ளனர். இவர்களை நாம் தெளிவாக ('காஃபிர்') இறை மறுப்பாளர்கள் என்று குறிப்பிட முடியும். அவ்வாறே இறைவனைப் பற்றி பலமுறை எடுத்துரைக்கப்பட்டு, உண்மை நிலையைத் தெளிவாக அறிந்தும் கூட கௌரவப்பிரச்சினை என்பதற்காக அதை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்களை நாம் 'காஃபிர்' என்று குறிப்பிடலாம். இன்றைய சூழலில் இறைவனைப் பற்றியும், இறைமார்க்கத்தைப் பற்றியும் ஏதும் அறியாத ஒரு பெரும் கூட்டம் நம்முன் இருக்கிறது. இவர்களை நாம் 'காஃபிர்கள்' என்று குறிப்பிடமுடியாது. உண்மையில் இவர்கள் 'அந்நாஸ்' எனும் எதையும் தெளிவாக அறியாத மக்கள்.

"யா அய்யுஹல் காபிரூன்" என்றழைக்கும் வசனம் குர்ஆனில் எத்தனை உள்ளது?

உண்மையில் இது 'சூரத்துல் காஃபிரூன்' எனும் ஓர் அத்தியாயத்தில் மட்டுமே இடம் பெற்றுள்ளது.

காஃபிர்(இறைமறுப்பாளர்)களே! நீங்கள் வணங்குவனவற்றை நான் வணங்கமாட்டேன். இன்னும் நான் வணங்குபவனை நீங்கள் வணங்குபவர்கள் அல்லர். அன்றியும் நீங்கள் வணங்குவனவற்றை நான் வணங்கமாட்டேன். உங்களுக்கு உங்கள் மார்க்கம் எனக்கு என் மார்க்கம். (109:1-6)

நீங்கள் காஃபிர்களாக (நிராகரிப்பவர்களாக) மாறிவிட்டீர்கள். சத்தியம் எது, அசத்தியம் எது? என பிரித்தறிந்த பின்னரும், சத்தியத்தை நிராகரித்து, அசத்தியத்தை ஏற்றிருக்கின்றீர்கள். இனி நாங்கள் இறைவனுடைய மார்க்கத்தின் பக்கம் உங்களை அழைப்பதில் அர்த்தமில்லை. உங்களுக்கும் எங்களுக்கும் இடையே இனி அழைப்புப்பணி பற்றிய சர்ச்சைக்கு இடமில்லை. ஆகவே, உங்களுடைய மார்க்கம் உங்களுக்குக் எனக்கு என்னுடைய மார்க்கம். இனி நாம் பிரியவேண்டிய நேரம் ஆகும்

என்று கூறும் நிலை எவரிடம் ஏற்படுகிறதோ, அத்தகையவர்களே நிராகரிப்பவர்கள் (கா∴பிர்கள்) ஆவர்.

இந்த அடிப்படையில், முஸ்லிம் குடும்பத்தில் பிறந்து இஸ்லாமிய மார்க்கக் கல்வியும் கற்று, இஸ்லாத்திற்கு புறம்பான காரியங்கள் பல செய்து, இஸ்லாமிய இறைநம்பிக்கையை நிராகரித்த அரபுப் பெயர் தாங்கியவரும் 'கா∴பிர்' எனும் இறைமறுப்பாளராக இருக்கலாம். அதே சமயம் நம்முடைய நாட்டிலுள்ள பெரும்பான்மை முஸ்லிமல்லாதவர்கள் இறைமார்க்கம் எதுவென்றே அறியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் திருக்குர்ஆனின் கூற்றுப்படி 'அந்நாஸ்' எனும் அறியாத பொது மக்களாவார்கள். அவர்களிடம் அன்போடு, அனுசரணையோடு பழம் இஸ்லாத்தை எடுத்துரைப்பது நம் மீது கட்டாயக் கடமையாகிறது. இப்பணிகர உம்மத்திற்குரியதாகும் முக்கியமாக அழைப் பாளனின் மனதில் பகைமை பாராட்டும் எண்ணம் இருக்கக்கூடாது. எதிரியை நினைத்து நினைத்து நம் எண்ணங்களைப் பாழாக்கிவிடக்கூடாது.

### எப்பிரிவினரிடம் அழைப்புப் பணியை மேற்கொள்வது?

நபி(ஸல்) அவர்கள் காலத்தில் அவர்களின் சமூகத்தில் மூன்று விதமான மக்கள் இருந்தனர்.

1. இஸ்லாத்தை கேட்டது முதல் (இறுதி வரை) எதிர்த்தவர்கள்

2. இஸ்லாத்தைப் பற்றிக் கேட்டவுடன் அதனை ஏற்றுக்கொண்டவர்கள்.

3. இஸ்லாத்தை ஏற்கவோ, எதிர்க்கவோ, ஆதரிக்கவோ செய்யாமல் சமாதானமாக ஒதுங்கி நின்றவர்கள்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யத் தொடங்கியது முதல் எடுத்த எடுப்பிலேயே எதிர்த்து நின்ற பெரும் எதிரியான அபூஜஹ்ல், அபூலஹப் போன்றோர்களும் உண்டு. நேருக்கு நேர் எதிர்வராத உத்பா, ஷைபா போன்றோரும் உண்டு.

இஸ்லாத்தை கேட்ட மாத்திரத்தில் ஏற்றுக்கொண்டவர்கள் உண்டு, மூன்று வருடங்களில் நபி(ஸல்) அவர்களுக்குக் கிடைத்தது 150 இறை நம்பிக்கையாளர்களே! என்று சரித்திரம் கூறுகிறது. இஸ்லாத்தை ஏற்றவர்களும் சிறுபான்மையினர் தான். எதிர்த்தவர்களும் சிறுபான்மைதான். இந்த இரண்டும் அல்லாமல் இறைநம்பிக்கையாளராக இன்றியும், எதிரிகளாக இன்றியும், சமாதானமாக இருந்து கொண்டு, இந்த நிலை எங்கு போய் முடியும் என்று காத்திருந்த மூன்றாவது ஒருபெரும் கூட்டமும் இருந்தது. இந்த கூட்டத்தினரிடம் தான் இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அதிக ஈடுபட்டுடன் அழைப்புப்பணி செய்தார்கள். இவர்களைக் குறித்து திருமறைக்குர்ஆனில் 'ஸூ ரத்துல் ஹூ து'வில் அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

இறைத்தூதரின் பார்வையை விட்டு மறைந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இவர்கள் தங்களுடைய இதயத்தைத் திருப்பிக் கொள்கின்றார்கள். அறிந்து கொள். இவர்கள் ஆடைகளால் தங்களை மூடி மறைத்துக் கொண்ட போதினும் அவர்களின் இரகசியங்களையும், அவர்கள் வெளிப்படுத்து கின்றவற்றையும் இறைவன் நன்கு அறிகின்றான். (திருக்குர்ஆன் 11:5)

மக்காவில் இறைநிராகரிப்பாளர்கள் நபி(ஸல்) அவர்களைப் பார்த்ததும் அவர்களை நேருக்கு நேர் சந்தித்து விடக்கூடாது என்பதற்காக அவர்களை விட்டு தம் முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தார்கள்.

நபி(ஸல்) அவர்கள் நடந்துவந்தால் இவர்கள் முதுகை காட்டி நிற்பார்களாம். இவர்கள் எதிரிகள் அல்ல. இஸ்லாத்தின் மீதோ, நபிகள் நாயகத்தின் மீதோ, நபித்தோழர்கள் மீதோ எதிர்ப்புகாட்டுபவர்களும் அல்ல. ஆனால், அச்சூழலில் இஸ்லாத்தில் இணைய இவர்களுக்கு விருப்பம் இல்லை, என்பதே அவர்கள் நிலைப்பாடு, இத்தகையவர்களிலிருந்து தான் பெரும்பான்மையினர் பிற்காலத்தில் நபித்தோழராக உருவாகி (சஹாபாக்களாக) வந்தனர் என்று வரலாறு கூறுகிறது.

நம்முடைய நாட்டிலுள்ள முஸ்லிமல்லாதவர்களில் பெரும்பான்மையினர் இந்த மூன்றாம் வகுப்பை சார்ந்தவர்களே. இஸ்லாத்தோடும் முஸ்லிம்களோடும் எதிர்ப்பு காட்டும் சமூகம் பெரும்பான்மையாக அல்ல. அது மிகச்சிறு பான்மையே! என்பதை முஸ்லிம்கள் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். கொள்கை ரீதியாக அல்லாமல் அரசியல் ஆதாயத்திற்காகத்தான் இவர்களின் இந்த எதிர்ப்பு என்றும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அற்ப அரசியல் ஆதாயத்திற்காக எதிர்க்கும் இத்தகைய எதிரிகளை மட்டுமே கவனத்தில் கொண்டு அதற்கான எதிர் நடவடிக்கை பற்றியே சதா சிந்திப் போமானால் அழைப்புப்பணி செய்திட முடியாது. ஆதலால் அழைப்பாளனு டைய மனதில் பகைமை உணர்வு வராமல் பார்த்துக்கொள்வது முக்கியமாகும்.

### அழைப்பாளனின் அவசியப்பண்பு

அடுத்து இறைவனின் மார்க்கத்தை எடுத்துரைத்திடும் போது பொறுமை மிக முக்கியமாகும்.

இறைவனின் மார்க்கத்தை எடுத்துரைத்திடும்போது கிண்டல் கேலி, முதலியன சந்திக்க நேர்ந்தாலும், துன்பங்களை தொல்லைகளை அவர்கள் தந்தாலும் விரக்தியடையாமல் சம்த்துக் கொண்டு அழைப்புப்பணியை தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டும். இன்னும் சத்தியத்தை உதாசீனப்படுத்தும் (அந்நாஸ்) அறியாத மக்களின் மீது அனுதாபமும் அழைப்பாளனுக்கு இருக்க வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் தாயிஃப் மக்களுக்கு இஸ்லாத்தை எடுத்துச் சொன்னபோது, அம்மக்கள் நபி(ஸல்) அவர்களை கல்லால் அடித்து, ஓட ஓட விரட்டினார்கள். பொன்மேனி புண்ணான நிலையில் ஷைபாவுடைய தோட்டத்தில் களைப்பாற அமர்ந்திருக்கும்போது, 'யா அல்லாஹ்வே! என் மக்கள் செய்ததை நீ மன்னிக்க வேண்டும். இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் என்றே பிரார்த்தித்தார்கள். மாறாக 'லகும் தீனுக்கும் வலியதீன்' உங்களுடைய மார்க்கம் உங்களுக்கு் எனக்கு என்னுடைய மார்க்கம் என்று கூறி, அழைப்புப் பிரச்சாரத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கவில்லை.

ஒவ்வொரு சமுதாயத்தின் தூதர்களும் இஸ்லாத்தை எடுத்து வைத்து அதன் பக்கம், மக்களை அழைத்தபோது, அவர்களை நாடு விட்டு நாடு துரத்தவும் கொலை செய்யவும் திட்டம் தீட்டியபோது தான் அந்த தூதர்கள் தம் சமூகத்தைக் கைவிட்டார்கள்.

ஏதோ ஒன்றிரண்டு மணிநேரம் எடுத்துச் சொல்லிவிட்டு இறுதியில், 'லகும் தீனுக்கும் வலியதீன்' உங்களுடைய மார்க்கம் உங்களுக்கு் எனக்கு என்னுடைய மார்க்கம் என்று கூறுவது அழைப்புப்பணியாகாது.

ஒரு சிறு சமூகத்தில் நூஹ் நபி எத்தனை ஆண்டுகள் அழைப்புப்பணி செய்தார்கள் என்று பார்க்க வேண்டும். நபிகள் நாயகம் மக்காவில் முதல் 13 ஆண்டு காலம் செய்த இடைவிடாத பிரச்சாரத்தால் 300க்கும் குறைவானவர்கள் தான் இஸ்லாம் மார்க்கத்திற்கு வந்தார்கள்.

ஆகவே, பொறுமை அதுதான் தியாகம் - அதுதான் அறப்போராட்டம் (ஜிஹாத்) ஆகும்.

## அழைப்புப்பணியின் வகைகளும் அணுகுமுறைகளும்.

அழைப்புப்பணி செய்வதன் மூலம் அல்லாஹ்வின் உதவியாளர்களாக பிரதிநிதிகளாக ஆகவேண்டும் என்கிற ஆவல் அநேகரிடம் இருக்கிறது. ஆனால், அந்தப்பணியை எப்படி துவங்குவது, தொடர்ந்து செய்வது என்கிற தயக்கத்தில் ஆசைகளை மனதிற்குள்ளேயே போட்டு அடக்கி விடுகிறோம்.

அழைப்புப்பணி எப்படியெல்லாம் செய்ய வேண்டும் என்பதற்கு பல அறிவுரைகளையும், போதனைகளையும் குர்ஆனிலும், நபிமார்களின் வாழ்விலும் காண்கிறோம். இன்னும் இஸ்லாமிய வரம்பை மீறாமல் (ஹிக்மத்தான) அறிவார்ந்த முறையில் எப்படியும் செய்ய நமக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நம் அறிவும் ஆற்றலும் கண்டுபிடித்த வழிமுறை எவ்வளவு சிறப்பானதாகத் தெரிந்தாலும் அதை விடச் சிறப்பாகவே குர்ஆனும் ஹதீஸு ம் கூறும் வழிமுறை இருக்கின்றது.

### கொள்கை வழி அணுகுமுறை

“உம் இறைவனின் பாதையில் (மக்களை) விவேக( ஹிக்ம)த்துடனும் அழகிய உபதேசத்தைக் கொண்டும் நீர் அழைப்பீராக! இன்னும் அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக!“ (திருக்குர்ஆன் 16:125) என்று அல்லாஹ் கூறுகிறான்.

கல்வியறிவும் சிந்தனையாற்றலும் முதிர்ச்சியடைந்த இந்தக் காலகட்டத்தில் அழைப்பாளன், இஸ்லாமிய அழைப்புப்பணியை அறிவார்ந்த ரீதியில் செய்யவேண்டும் சந்தேகத்திற்கு இடமில்லாத ரீதியில் ஆதாரங்களையும் அத்தாட்சிகளையும் எடுத்துவைத்து மக்களை அழைக்கவேண்டும்.

1. விவேகம் (ஹிக்மத்)
2. அழகிய உபதேசம்
3. அழகிய முறையில் தர்க்கவாதம்

இம்மூன்றும் இறைவசனம் கூறும் வழிமுறைகள் ஆகும். இவ்வழி முறைகளில் என்னென்ன விஷயங்களைச் சொல்லி இஸ்லாத்தின் பால் மக்களை அழைக்கவேண்டும்? இஸ்லாத்தை முழுமையாகச் சொல்லி அழைக்க வேண்டுமா? அவ்வாறு சொல்வதற்குரிய கால அவகாசம் உள்ளதா? அது சாத்தியமா? இல்லை இஸ்லாத்தில் ஏதாவது ஒருபாகத்தை எடுத்துவைத்தால் போதுமா? என்று பார்ப்போமானால், ஒருவர் மூன்று விஷயங்களை எடுத்து அழைப்புப்பணியை வைத்து தஃவா செய்தால், அதனை முறையான அழைப்புப்பணி எனக்கொள்ளலாம். அவை:

1. ஏகத்துவம் (தவ்ஹீத்)
2. தூதுத்துவம் (ரிஸாலத்)
3. மறுமை (ஆகிரத்)

இம்மூன்று விஷயங்களை ஓர் அழைப்பாளன் மற்றொருவருக்கு எடுத்து வைத்தால் மட்டுமே அதனை முறையான அழைப்புப் பணி என்று சொல்லலாம்.

### குலையாத கொள்கைப் பிடிப்பை ஏற்படுத்துதல்:

ஒரு மனிதர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார். ஆனால், அவர் இஸ்லாத்தில் நிலையாக நிற்கவேண்டும் என்றால் மறுமை பற்றிய அச்சஉணர்வு இருக்கவேண்டும். ஓர் அழைப்பாளருடைய திறமை எங்கு இருக்கிறதென்றால் அழைப்பைச் செவிமடுப்பவருடைய மனதில் மரணத்திற்கு பிந்தைய வாழ்வு பற்றிய அச்சவுணர்வை ஏற்படுத்துவது தான்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அரபு குரைஷிகளை அழைத்து, ஒன்றுகூட்டி "இந்த மலைக்குப் பின்னால் ஒரு பெரும்கூட்டம் உங்களை ஆக்கிரமிக்க தயாராக நிற்கிறது என்று நான் கூறினால், நீங்கள் நம்புவீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு, 'ஆம் நம்புவோம்!' என்றார்கள். அப்படியானால், நான் உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். கடுமையான தண்டனையைக் குறித்து முன்னறிவிப்பு செய்யவே நான் வந்திருக்கின்றேன். வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்று நீங்கள் நம்பிக்கை கொள்ளாதவரையில்" என்னால் உங்களை இந்த உலகிலிருந்து காப்பாற்ற முடியாது. மரணத்திற்கு பிந்தைய வாழ்விலிருந்தும் உங்களைக் காப்பாற்ற என்னால் முடியாது என்று கூறினார்கள். "இதைக்கூறவா எங்களை நீர் அழைத்தீர்?" என்று (அந்தக் கூட்டம்) மண்ணை அள்ளி வீசி சபித்துவிட்டுச் சென்றது.

இங்கே நபி(ஸல்) அவர்கள் மக்கள் மத்தியில் (மனங்களில்) மறுமை அச்சத்தை ஊட்டவே முயன்றார்கள். அத்துடன் ஏகத்துவத்தையும் தூதுத்துவத்தையும் கூறி வைத்தார்கள்.

இஸ்லாம் குறித்து புகழ்ந்து பேசும் பேச்சாளர்களையும், எழுதும் எழுத்தாளர்களையும் நாம் பார்த்திருக்கின்றோம். அவர்களை இஸ்லாத்தின் பல அம்சங்கள் கவர்ந்திருந்தாலும் இஸ்லாத்தைத் தழுவிடும் எண்ணம் அவர்களின் உள்ளத்தில் உதிப்பதில்லை. அவர்கள் இஸ்லாத்தின் பக்கம் வராமலிருப்பதற்குக் காரணம் மறுமை பற்றிய அச்சவுணர்வு இல்லாததேயாகும்.

இஸ்லாத்தில் ஏகத்துவமும் தூதுத்துவமும் பகுத்தறிவுக்கு ஏற்புடைய தத்துவம் தான். ஏகத்துவத்திற்கு இணையான ஒரு கடவுள் தத்துவம் இல்லை. நபிகள் நாயகம் ஒரு சிறந்த மனிதர். இஸ்லாத்தின் அடிப்படைச் சித்தாந்தத்தில் எவ்வித குறைபாடோ, முரண்பாடோ இல்லை என்று ஒப்புக்கொண்டு விட்டேன். பின்னர் ஏன் இஸ்லாத்தினுள் நுழைய வேண்டும் என்று கேட்பவர்களும் உண்டு.

ஒருவர் இஸ்லாத்திற்கு வருகிறார் என்றால் குடும்பத்திலிருந்தும் சமூகத்திலிருந்தும் அரசு மூலமும் அவருக்கு சில பிரச்சினைகள், கஷ்டங்கள் வரும். சில சலுகைகளை இழக்கவேண்டியது வரும். சமூகத்தில் பெற்றுவந்த அந்தஸ்துகளை இழக்க நிலை நேரிடும். எனினும், மரணத்திற்கு பின்னுள்ள வாழ்வை கருத்தில் கொண்டால் மட்டுமே இவ்வுலக வாழ்வில் அனுபவித்து வரும் வசதி, வளங்களைத் தியாகம் செய்யத் துணிவார். எனவே மறுமை வாழ்வு எனும் எண்ணத்தை மக்கள் மனதில் ஏற்படுத்துவதே ஓர் இஸ்லாமிய அழைப்பாளனின் முக்கிய குறிக்கோளாக இருக்கவேண்டும். ஒர் அழைப்பாளன் முஸ்லிமல்லாதவரை அணும், அழைப்பு கொடுப்பது. என்றால், சிலமணி நேரங்கள் அந்த பிறமத அன்பரோடு தர்க்கம் செய்தார். தர்க்கத்தில் வெற்றிபெற்றார் என்று கூறும்படி இருக்கக் கூடாது. மாறாக, ஏகத்துவத்தை எடுத்துச் சொன்னார், தூதுத்துவத்தைச் சொன்னார்.

மறுமையைச் சொன்னார் என்னும் நிலையை அடைந்தார் என்றால் தம் கடமையை முறையாக நிறைவேற்றினார் எனலாம்.

## அழைப்புப்பணியின் வகைகளும், அதன் அனுகூலங்களும்:

நவீன உலகில் மிக எளிதாகப் பிரச்சாரம் செய்ய பல வழிமுறைகள் உள்ளன, உரையாற்றுதல், உரையாடுதல் மூலமாகவும், செயல்பாட்டின் மூலமாகவும் இன்னும் விஞ்ஞான உபகரணங்களான ரேடியோ, டெலிவிஷன், சாட்டிலைட், ஆடியோ, வீடியோ கேசட்டுகள் மூலமாகவும் இன்னும் புத்தகங்கள் துண்டு பிர இவ்வாறு செய்யப்படும் வழிமுறைகள் இரு வகைகளாகும். 1. தனிமொழி (monologue) 2. உரையாடல் (dialogue) சுரங்கள் மாத, வார, தின இதழ்கள் மூலமாகவும் இஸ்லாத்தை எடுத் துரைக்கலாம்.

### தனிமொழி (monologue)

தனிமொழி அல்லது தனிஒருவர் மொழி என்பது தனக்குத் தானாகவோ அல்லது குறிப்பிட்டவரின் முன்னிலையில் அல்லாமல் ஒரு கூட்டத்திலோ பேசப்படும் தனிமனிதனின் நீண்ட பேச்சு ஆகும். அது வாய் மொழியாகவும், எழுத்து மொழியாகவும் இருக்கலாம். பேச்சிலோ, இலக்கியப் படைப்பிலோ அமைந்த நீண்ட நேர பேச்சு அல்லது எழுத்து தனிமொழி எனப்படும்.

### உரையாடல் மொழி (dialogue)

உரையாடல் என்பது இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களிடம் நேருக்குநேர் உரையாடுவது ஆகும்.

மேற்கண்ட இரு வகைகளின் அனுகூலங்கள்:

1. எழுத்தாற்றலாலும், பேச்சாற்றலாலும், புத்தகங்கள், மாத, வார, தின இதழ்கள், துண்டு பிரசுரங்கள், ரேடியோ, டெலிவிஷன், சாட்டிலைட், பொதுமேடை மூலமாகப் பேசப்படும் பேச்சு அல்லது எழுத்து அனைத்தும் தனிமொழி வகையைச் சார்ந்ததாகும். தனிமொழி மூலமாக படிக்கவோ கேட்கவோ முடியும் சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளவும் முடியும்.

2. உரையாடலைப் பொறுத்தவரை சொல்பவரும் கேட்பவரும் ஒரே சமயத்தில் இருந்தாக வேண்டும்.

3. இந்த உரையாடல் மூலம் எடுத்துவைக்கும் செய்தியானது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறிப்பிட்ட கூட்டத்தோடு அல்லது மனிதர்களோடு நின்றுவிடும் வாய்ப்புள்ளது.

4. இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் கலந்துரையாடல் செய்வதன் மூலம் சந்தேகங்களை உடனுக்குடன் தெளிவுபடுத்திக் கொள்ள முடிகிறது.

5. தனிமொழி மூலம் செய்திகைளைக் கொடுப்பவர் பொறுமையாக இருந்து செய்திகளைச் சேகரித்து புத்தகமாகவோ, துண்டு பிரசுரமாகவோ வெளியிடலாம். அதைப்படிப்பவர்கள் சமயம் கிடைக்கும்போது படித்துக் கொள்ளலாம். இந்த வசதி தனிமொழி வகையில் மட்டும் உண்டு.

6. தனிமொழி வகையில் அமைந்த புத்தகங்கள், துண்டு பிரசுரங்கள் ஆயிரம். அல்லது பத்தாயிரம் அல்லது ஒரு இலட்சம் என்று அச்சடித்து வெளியிடுவதன் மூலம் பணி மென்மேலும் விரிவடைய வசதி உண்டு.

7. அந்த உரையாடலை வீடியோ, ஆடியோ கேசட்டுகளில் பதிவு செய்து அதைப் பல மடங்காக்கி வெளியிடும்போது, அதுவும் பல மடங்காகி பயனுடையதாக மாறிவிடுகிறது.

8. எழுத்தாற்றல் அல்லது பேச்சாற்றல் மூலமாக தனிமொழி வகையில் அழைப்புப்பணி செய்திட எழுத்தாற்றல் அல்லது பேச்சாற்றலோடு கூட்டு முயற்சியும், உழைப்பும், பொருளாதார வசதியும் ஒன்று சேர்ந்தால்தான் சத்தியத்தை எடுத்துவைத்திட முடியும். ஆனால் உரையாடல் மூலமாக அழைப்புப்பணி செய்திட பேச்சாற்றலோ, எழுத்தாற்றலோ தேவையில்லை.

9. பொருளாதார அவசியத்தைப் பொறுத்தவரை அது தேவையான தாகவோ தேவையற்றதாகவோ சூழலை பொறுத்து மாறுபடும்.

10. தனி நபராக நின்றுகூட அழைப்புப்பணி செய்யலாம். இன்னும் உரையாடல் மூலம் அழைப்புப் பணி செய்யும்போது, அன்னிய உணர்வு அகன்று உறவு நெருக்கமடைகிறது.

### இரு வகைகளில் பெரும் பலன் கிட்டும் அழைப்பு வழி:

மனிதர்களின் அறிவு, கவனம் எவ்வகையில் இருக்கிறது என்பது பற்றி சமீபத்திய ஆய்வின் முடிவு தெரிவிப்பது என்னவென்றால், சராசரி மனிதர்களில் படித்து அறிவதில் ஆர்வமுடையவர்கள் பத்து சதவீதம்.

கேட்டு அறிவதில் ஆர்வமுடையவர்கள் 20 சதவீதம்.

பார்த்து அறிவதில் ஆர்வமுடையவர்கள் 30 சதவீதம்.

பார்த்தும் கேட்டும் விசயங்களைத் தெரிந்து கொள்வதில் ஆர்வமுடையவர்கள் 50 சதவீதம் என உள்ளனர்.

ஒரே சமயத்தில் பார்த்தும் கேட்டும் விசயங்களைத் தெரிந்துகொள்வதில் ஆர்வமுடையவர்கள் தான் அதிகம் இருப்பதால் இவ்வகையிலான அழைப்புப்பணியே பன் மடங்கு சிறந்ததாக விளங்கும் எனலாம்.

புத்தகங்கள், மாத, வார, நாளிதழ்கள், ஆடியோ, வீடியோ மூலமாக செய்தியைப் பரப்புவோமானால் அது ஆயிரக்கணக்கான மக்களைச் சென்றடைய வாய்ப்புள்ளது. ரேடியோ, டி.வி., சாட்டிலைட் மூலம் செய்தியைப்பரப்பு வோமானால் அது இலட்சக்கணக்கான அல்லது கோடிக்கணக்கான மக்களைச் சென்றடைய வாய்ப்புள்ளது. ஆனால், இவைகள் மூலம் சத்தியப் பிரச்சாரம் செய்வதற்கு ஏராளாமான பொருளாதாரம் தேவைப்படுகிறது. ஆனால், எந்த ஒரு பொருளாதாரச் செலவும் இல்லாமல் ஒவ்வொருவரும் செய்திடக்கூடியதும் மிகவும் பயனுடையதுமான வழிமுறை உரையாடல் மூலம் செய்திடும் அழைப்புப்பணியாகும்.

### இலகுவான அழைப்பு முறையும், அதன் வகைகளும்

நல்ல அறிவுப்பூர்வமான உரையாடல்களை புத்தகங்களில் பதித்து வெளியிடுவதன் மூலமும், ஆடியோ, வீடியோ கேசட்டுகளில் பதிவு செய்து ரேடியோ, டெலிவிஷன்களில் ஒலிபரப்புவதன் மூலம் பல மடங்கு பலன்களைப் பெற முடியும்.

இருப்பினும் மிகவும் எளிதானதும், அதிகம் பயன்தரக்கூடியதும், அனைவருக்கும் சாத்தியமானதும், உரையாடல் மூலம் செய்யும் அழைப்புப்பணியே என்பதால் அவ்வுரையாடல் மூலம் எவ்வாறெல்லாம் இஸ்லாத்தை எடுத்துரைக்கலாம் எனக் காண்போம்.

ஒருவர் - மற்றொருவருடன் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் நேருக்கு நேர் உரையாடுதலை இருவகையாகப் பிரித்துக் கொள்வோம்.

1. குறைந்த நேர உரையாடல்

2. நீண்ட நேர உரையாடல்

குறைந்த நேர சந்திப்பின்போது ஏற்படும் உரையாடலில் எப்படி இஸ்லாத்தை எடுத்துவைக்கலாம். நீண்ட நேர சந்திப்பு அல்லது அடிக்கடி ஏற்படும் சந்திப்பின்போது ஏற்படும் உரையாடலில் எப்படி இஸ்லாத்தை எடுத்துவைக்கலாம் என்பதைத் தனித்தனியாகக் காண்போம்.

### 1. குறைந்த நேர உரையாடல்:

பேருந்திலோ, பேருந்து நிலையத்திலோ, பாதையோரத்திலோ நம்முடன் உடனிருப்பவர்களிடம் உரையாடுவதை குறைந்த நேர உரையாடல் எனலாம். இவர்களிடம் எப்படி பேச்சைத் துவக்கி இஸ்லாத்தை எடுத்து வைப்பது?

குர்ஆனையும் ஹதீஸையும் முறையாகக் கற்றறிந்த நல்ல மார்க்க அறிஞராக இருப்பினும், நூல்கள், கேள்வி ஞான வாயிலாக மார்க்க அறிவை வளர்த்துக் கொண்டவராக இருப்பினும் விவேகமான (ஹிக்மத்தான) முறையில் உரையாடலைத் துவக்கி சத்தியத்தை எடுத்து வைக்க முடியவில்லையெனில், அல்லது தெரியவில்லையென்றால் அவருடைய உரையாடல் மூலமாக நற்பலன் கிட்டாது.

உரையாடல் மூலம் அழைப்புப்பணி செய்யக் கூடியவர்கள் பெரிய பேச்சாளராக இருக்க வேண்டும் என்கிற அவசியமே இல்லை. சாதாரணமாக உரையாடுவது போல் உரையாடினாலே போதும். அப்படித்தான் உரையாடவும் வேண்டும்.

பேருந்தில் பயணிக்கிறோம். பக்கத்தில் அமர்ந்திருப்பவரிடம் பத்து அல்லது இருபது நிமிடம் பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இதுவரை அவரை சந்தித்ததில்லை. இனி மேற்கொண்டும் சந்திப்போம் என்று உறுதியாகக் கூறவும் முடியாது. அவர் இந்துவாக இருக்கலாம் அல்லது கிறித்தவராக இருக்கலாம். அவர் இந்துவென்றால் இந்துமத அடிப்படையில் தன் வாழ்வு முறையை அமைத்துக் கொண்டவர். அவர் கிறிஸ்தவரென்றால் கிறிஸ்தவ மத அடிப்படையில் தன் வாழ்வு முறையை அமைத்துக் கொண்டவர். நாம், இஸ்லாமிய அடிப்படையில் நம் வாழ்வு முறையை அமைத்துக் கொண்டவர்கள். இரு மாறுபட்ட கலாச்சாரத்தை, கொள்கையுடையவர்கள் அங்கே சந்தித்துக் கொள்கிறோம். நம்முடைய பாதை ஒன்று. அவர்களுடைய பாதை மற்றொன்று. அவரிடம் நேரடியாக இஸ்லாத்தை எடுத்துவைப்போமானால், அதை அவர் மனம் ஏற்காது. அது (ஹிக்மத்தும்) விவேகமும் ஆகாது. அவர் உரையாடலில் தொடர்ந்து நீடிக்க விரும்புவார் அல்லது விரும்பமாட்டார் என்று கூறவும் முடியாது. எப்படியாயினும் அவர் கவனத்தை நம்மால் ஈர்க்கும் விதமாக ஆற்றலுடன் துவங்கி இஸ்லாத்தை எடுத்துவைத்திட வேண்டும்.

இதுவரை முன் அறியாதவரிடம் எப்படி பேச்சைத் துவங்கி, அதில் கவனம் செலுத்த வைக்கலாம் என்பதற்கு ஒன்றிரண்டு உதாரணச் சம்பவங்கள். இங்கே தரப்பட்டுள்ளது.

#### உதாரணம்: 1

"நண்பரே! அல்லது பெரியவரே! எனக்கு ஒரு சந்தேகம் அதைத் தெளிவுபடுத்துவீர்களா?"

யதார்த்தமாக கேட்கவேண்டும். கேள்வியில் கிண்டலோ, கேலியோ கண்டிப்பாக இருக்கக்கூடாது. அவர் மூலம் அறிந்து கொள்ளும் ஆவலில் பவ்யமாகக் கேட்க வேண்டும்.

எதற்காக நெற்றியில் சந்தனக் குறி அல்லது திருநீர் குறி இடுகிறீர்கள்? (அவர் நெற்றியில் அதனை இட்டிருந்தால்)

அதற்கு அவர் ஏதாவது பதில் கூறுவார்.

அவர் பதிலில் திருப்தி அடைந்தது போல் முகபாவத்தைக் காட்டித் தொடருங்கள்...

நான் ஒரு முஸ்லிம். நாங்கள் பின்பற்றும் மார்க்கத்தில் இதுபோல் மதச்சின்னம் எதுவும் இல்லை. முஸ்லிமிற்கு அடையாளம் தொழுகையாகும் என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். நாங்கள் தனிவிதமாக தொழுவதை அறிவீர்கள். ஆனால், எங்களுக்கென்று ஒரு தனிக்கடவுளை ஏற்படுத்திக் கொண்டு தொழுவதாக எண்ணிக் கொள்ளாதீர்கள். எந்த ஒரு கடவுள் இப்பிரபஞ்சத்தைப் படைத்து இயக்கி காத்து அருள்செய்கிறானோ அந்தக் கடவுளைத்தான் வணங்குகிறோம் என்று உரையாடலைத் தொடருங்கள்.

அவர் கவனத்தில் தொய்வு ஏற்படாமல் இருக்க ஏகதெய்வக் கொள்கைக்கு ஆதாரமாக இடையிடையே இந்து வேதங்களிலிருந்தும் ஆதாரத்தை எடுத்துவைத்துப் பேசுங்கள். பேசிக்கொண்டேயிருங்கள். பேருந்தைவிட்டு நீங்கள் இறங்கும்வரை அல்லது அவர் இறங்கும்வரை இஸ்லாத்தை மேலும் அறிய அவர் ஆவலுடையவராக இருந்தால் மேலும் தொடர்புகொள்ள உங்கள் முகவரியைக் கொடுங்கள். அல்லது அவர்குடியிருக்கும் குடியிருப்புக்கு அருகில் இருக்கும் பிரசார மையத்தின் (மர்க்கஸின்) விலாசத்தைக் கொடுங்கள். இதற்கு இந்து கிரந்தங்களின் அறிவையும் ஞானத்தையும் அழைப்பாளர் பெற்று இருப்பது அவசியம்.

உதாரணம்: 2

அருகிலிருக்கும் நபர் கிறிஸ்தவராக இருக்கிறார். அவர் சிலுவை அணிந்திருந்தால் குறியிட்ட இந்துவிடம் கேட்டதுபோல் எதற்காக சிலுவை அணிகின்றீர்கள் என்று கேளுங்கள். அல்லது நண்பரே! என்னுடைய பெயர் அப்துல்லா (உங்களுடைய பெயரைக் கூறவும்) நான் ஒரு முஸ்லிம். உங்களுடைய இயேசுவை நாங்கள் எப்படி விசுவாசிக்கிறோம் என்பதை அறிவீர்களா? எனக் கேட்டுப்பாருங்கள்.

அன்பான உங்களுடைய அனுகுமுறையின் மூலமாக அவர் உங்களை நோக்கித் தன் காதுகளைக் கூராக்கிக் கொள்வார்.

மர்யத்தின் குமாரர் இயேசு தந்தையில்லாமல் பிறந்தார். அநேக அற்புதங்களைச் செய்தார். அல்லாஹ் அவருக்கு இன்ஜீல் என்னும் வேதத்தைக் கொடுத்தான். அதைத்தான் பைபிள் இராஜ்ஜியத்தின் சுவிசேசம் என்கிறது என்று இருவரும் பொதுவாக விசுவாசிக்கும் விசயங்களை எடுத்துவைத்து, அவர் மனநிலையை சற்று நடுநிலைக்குக் கொண்டு வாருங்கள் குர்ஆன் - பைபிள் வசனங்களின் ஆதார அடிப்படையில் இயேசு இஸ்ரவேலர்களுக்கு அனுப்பப்பட்ட கடவுளின் தூதர். அவர் கடவுளோ, கடவுளின் குமாரரோ அல்ல. எந்த கர்த்தர் - இயேசுவையும் அவருக்கு முந்தைய தீர்க்கதரிசிகளையும் அனுப்பி வைத்தாரோ, அதே கர்த்தர் தான் அகில உலகத்திற்கும் பொதுவாக முஹம்மது(ஸல்) அவர்களை அனுப்பி வைத்தார். இதை பைபிளும் கூறுகிறது என்று பைபிளிலிருந்தும் ஆதாரங்களை எடுத்துவைத்துப் பேசுங்கள். அவர் கேட்கும் வரை தொடர்ந்து

பேசுங்கள். இதற்கு பைபிள் அறிவையும் ஞானத்தையும் அழைப்பாளர் பெற வேண்டியது அவசியமாகும்.

### உதாரணம்: 3

பேருந்து ஓரிடத்தில் நிற்கிறது. அங்கு ஒரு கோவில் இருக்கிறது அல்லது சாமியை பல்லக்கில் தூக்கி வருகிறார்கள். பக்கத்தில் இருப்பவர்களிடத்தில் பவ்யமாகக் கேளுங்கள்.

என்ன சாமி இது? எதற்காக தூக்கி போகிறார்கள்?

அவர் ஏதாவது பதிலைக் கூறுவார்.

எல்லா மதங்களிலும் இப்படி பல சாமிகள், பல கடவுள்கள் இருக்கின்றன. இஸ்லாத்தில் ஒரு கடவுள்தான் உண்டு. அந்தக் கடவுள் இந்தப் பிரபஞ்சத்திற்கு அப்பால் இருக்கிறான் என்கிறது. இதே கருத்தை பல கடவுள்களை அங்கீகரித்த மதங்களின் வேதங்களும் கூறுகின்றன என்று கூறி அதற்கு ஆதாரமாக மதங்களின் வேதங்களிலிருந்து ஆதாரங்களை எடுத்துவைத்துப் பேசிக் கொண்டேயிருங்கள். இதற்கும் அந்தந்த மதங்களின் ஆதார நூல்களின் அறிவை அழைப்பாளன் பெற்றிருத்தல் அவசியமாகிறது.

சந்தர்ப்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு ஏகத்துவம், தூதுத்துவம், மறுமை என்று முடிந்தவரையில் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையைச் சொல்லுங்கள். இனி அவரை சந்திக்கின்ற வாய்ப்பு கிடைக்கும் என்றோ, கிடைக்காது என்றோ கூற முடியாது. ஆகவே, முடிந்தவரை தெளிவாக, நேராக பசுமரத்தில் ஆணி அடித்தாற் போல் கூறிவிடுங்கள்.

### உதாரணம்: 4

கடவுள் கொள்கையை எடுத்து வைக்க சூழ்நிலை அமையவில்லையா? அல்லது அவர் இந்துவா? கிறிஸ்தவரா? என்பதை உங்களால் அறிய முடியவில்லையா? அரசியல் பொருளாதாரம் சமூகவியல் பற்றி பேசத் துவங்கி அதில் இஸ்லாத்தின் நிலை என்ன என்பதை விளக்குங்கள். இதற்கும் அரசியல் சமூக பொருளாதார அறிவை அழைப்பாளன் பெற்றிருக்கவேண்டியது அவசியம்.

### மேலும் உதாரணங்கள் சில:

- ஆபாச சினிமா சுவரொட்டியைச் சுட்டிக்காட்டி பெண்ணினம் எப்படி எல்லாம் இழிவுபடுத்தப்படுகிறது என்று துவங்கி இஸ்லாம் வலியுறுத்தும் முறையான ஆடையின் அவசியத்தை எடுத்து வையுங்கள்.
- செய்தித்தாளில் காணும் சாதிச் சண்டையை சுட்டிக்காட்டி இஸ்லாம் இயம்பும் மனித உரிமையையும், சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் எடுத்து வையுங்கள்.
- குற்றங்கள் பெரும் வருவதைச் சுட்டிக்காட்டி இஸ்லாம் கூறும் குற்றவியல் சட்டத்தின் சிறப்பை விவரியுங்கள்.
- விலைவாசி உயர்வை சுட்டிக்காட்டி வட்டியின் கெடுதியை எடுத்து வையுங்கள்.
- ஊழலைச் சுட்டிக்காட்டி இஸ்லாமிய அரசியலின் சிறப்பை எடுத்துக் கூறுங்கள்.

இப்படி நடைமுறையில் என்னென்ன அவலங்களைக் காணுகின்றீர்களோ, கேட்கின்றீர்களோ அவற்றுடன் இஸ்லாத்தைத் தொடர்பு படுத்தி இஸ்லாத்தின் கருத்தை, கொள்கையை எடுத்துவையுங்கள்.

சத்தியத்தை எடுத்துரைக்க வாய்ப்புகளை நாமே உருவாக்க வேண்டும். பேருந்திலோ, ரயிலிலோ, பேருந்து நிலையத்திலோ, ரேசன் கடை வரிசையிலோ எவ்விடமானாலும் உரையாடுவதற்கான சூழ் நிலை அமைந்திருக்குமானால், இஸ்லாத்தை எடுத்து வைப்பதற்கான வாய்ப்பை அறிவுப்பூர்வமாக உருவாக்கிக் கொள்ளவேண்டும். இன்னும் கிடைக்கும் பல வாய்ப்புகளையும் மிக அழகாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நபி யூசுப்(அலை) அவர்களை அநியாயமாக சிறையிலடைத்தபோதும், சிறைக்குள் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி, சத்தியத்தை எத்திவைத்த நிகழ்வை ஒரு முன்மாதிரியாக அல்லாஹ் தனது திருமறையிலே எடுத்துக் காட்டுகிறான்.

சிறையிலிருக்கும் என் இரு தோழர்களே! வெவ்வேறான பல தெய்வங்கள் இருப்பது நல்லதா? அல்லது (யாவரையும்) அடக்கி ஆளுகிற ஒருவனான அல்லாஹ்வா?

அவனையன்றி நீங்கள் வணங்கிக் கொண்டிருப்பவையாவும் நீங்களும் உங்கள் மூதாதையரும் வைத்துக் கொண்ட (வெறும் கற்பனைப்) பெயர்களேயன்றி வேறில்லை. அவற்றுக்கு யாதொரு ஆதாரத்தையும் அல்லாஹ் இறக்கி வைக்கவில்லை. அல்லாஹ் ஒருவனுக்கே அன்றி (வேறெவருக்கும்) அதிகாரம் இல்லை. அவனையன்றி (வேறு எவரையும்) நீங்கள் வணங்கக் கூடாது என்று அவன் (உங்களுக்குக்) கட்டளையிட்டிருக்கிறான். இதுவே நேரான மார்க்கமாகும். ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் இதனை அறிந்து கொள்வதில்லைம் (12:39, 40) என்று யூசுப்(அலை) போதனை செய்ததாக குர்ஆன் கூறுகிறது.

இறைவனுடைய மார்க்கத்தை எடுத்துவைப்பதுதான் நமக்கு இடப்பட்ட கட்டளையாகும். மாற்றார்கள் இதைக் கவனமாக கேட்டு சிந்தித்தாலும் அல்லது ஒரு காதில் வாங்கி, மற்றொரு காது வழியாக விட்டுவிட்டாலும். அதைப்பற்றி அழைப்பாளன் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. காரணம் சத்தியத்தைச் சொல்வதே ஒரு முஸ்லிமின் கடமை. நேர்வழி காட்டுவது இறைவனைச் சார்ந்ததாகும். அதைத்தான் திருமறையில் இறைவன் கூறுகிறான்:

‘நீர் நல்லுபதேசம் செய்வீராக, நிச்சயமாக நீர் நல்லுபதேசம் செய்பவர் தாம். அவர்கள்‘ மீது பொறுப்புச் சாட்டப்பட்டவர் அல்லர்‘ (88:21, 22)

### 2. நீண்ட நேர உரையாடல்:

மீண்டும் மீண்டும் சந்திக்கும் வாய்ப்புடைய மனிதர்களுடன் நீண்ட நேரம்- தொடராக இல்லாவிட்டாலும் அடிக்கடி உரையாடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. பள்ளி, கல்லூரி, அண்டை வீடு, பணிபுரியுமிடம், ஆகிய இடங்களிலுள்ள நண்பர்கள் பெரியோர்கள் ஆகியோர்கள் - மீண்டும் மீண்டும் சந்திக்கும் வாய்ப்புடையவர்கள் ஆவார்கள். இவர்களுக்கு முறையாக, அழகாக இஸ்லாத்தை எடுத்துவைக்க கடமையுடையவர்களாக இருக்கிறோம்.

சத்தியத்தை எடுத்துவைக்க வாய்ப்பை எதிர்நோக்கி, அதில் படிப்படியாக இஸ்லாத்தை எடுத்து வைக்க விரும்புகிறோம். ஆனால், உங்கள் நண்பர் அதை விரும்பக்கூடியவராக இல்லை. அதற்குரிய வாய்ப்பையும் அவர் தருவதில்லை.

‘கண்ணன்! உங்களிடம் இஸ்லாம் மார்க்கம் பற்றிய சில செய்திகளை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். சற்று நேரம் அதற்காக ஒதுக்குவீர்களா?‘ எனக் கேட்கிறோம்.

‘எனக்கு நேரமில்லை அல்லது உங்களுக்கு வேறு வேலை இல்லை‘ என்று அவர் சொல்லக் கூடியவராக இருக்கிறார்.

நீங்களாக வலிய எடுத்துவைத்தாலும் அதில் அவர் ஆர்வம் காட்டுவார் என்று சொல்ல முடியாது. அவர் கவனத்தை உங்கள் அழைப்பின்பால் திருப்ப வேண்டும். எப்படி?

‘கண்ணன்! பலதாரமணம் எப்படி அனுமதிக்கப்படவில்லையென்றால், உலகில் பெண்கள் கண்ணியமாக வாழ முடியாது என்கிறேன்?‘ என்று சொல்லிப்பாருங்கள்.

‘என்ன சொல்கிறீர்கள்?‘ என நண்பர் வினவுவார்.

‘சரி, விளக்கமாகச் சொல்கிறேன். அதற்காக 5 நிமிடம் ஒதுக்க முடியுமா?‘ என்று கேளுங்கள்.

‘ஐந்து நிமிடம் என்ன அரை மணிநேரம் ஒதுக்குகிறேன்‘ என்று கூறலாம்.

ஐந்து நிமிடம் மார்க்க உபதேசம் கேட்க நேரமில்லை என்றவர் இப்போது அரை மணிநேரம் ஒதுக்குகின்றேன் என்கிறார்.

இதைத்தானே நாமும் எதிர்பார்த்தோம். எனவே, தெளிவான அழகான பதிலுடன் இத்தருணத்தைப் பயன்படுத்தி, இஸ்லாத்தை யதார்த்தமாக எடுத்து வைக்கலாம்.

அது ஒருகிறிஸ்துமஸ் அல்லது கிருஷ்ண ஜெயந்தி நாளாக இருக்கிறதும்.

ஜான்! எதற்காக கிறிஸ்துமஸ் கொண்டாடுகிறீர்கள்?ம்

“அது இயேசு நாதர் பிறந்த நாள் என்பதால்!“

“நீங்கள் இயேசுவை கடவுள் என்கிறீர்கள். கடவுள் தோன்றுதல் இல்லாதவன் என்றல்லவா பைபிள் கூறுகிறது“.

மூர்த்தி! எதற்காக கிருஷ்ண ஜெயந்தி?ம்

அது கிருஷ்ண பகவான் பிறந்த தினம். அதனால்தான் அதனை பண்டிகையாக கொண்டாடுகிறோம்.

கிருஷ்ணனை பரமாத்மா என்கிறீர்கள். பரமாத்மா தோன்றுதல் இல்லாதவன் என்றல்லவா பகவத் கீதை கூறுகிறது...ம்

என்று பிற மதத்தினரின் வேத ஆதாரத்தை எடுத்து வைத்து, துவங்கி இஸ்லாத்தை விவேகமாக (ஹிக்மத்தாக) எடுத்து வைக்கவேண்டும்

-விஞ்ஞான உபகரணங்களைச் சுட்டிக்காட்டி உதாரணத்திற்கு வீடியோவை சுட்டிக்காட்டி, இந்த வீடியோவைப் பற்றி 1400 ஆண்டுகளுக்கு முன்பே நபிகள் நாயகம்(ஸல்) முன்னறிவிப்பு செய்துள்ளதை அறிவீர்களா? எனக் கேட்டுப்பாருங்கள்.

பிற மதத்தினர் நிச்சயமாக தங்கள் காதுகளை கூராக்கிக் கொள்வார்கள். ‘சாட்டையின் ஓரமும், செருப்பின் பட்டியும் மனிதனிடம் பேசும் நாள்வரும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

வீடியோ, ஆடியோ நாடாக் களையே செருப்பின் பட்டி (பெல்ட்) என்று அன்று அறிவித்திருக்கிறார்கள் என்று கூறி, மேலே தொடர்ந்து குர்ஆன் கூறும் விஞ்ஞானத்தை எடுத்து வைத்து தொடரலாம்.

இப்படி நடைமுறை விஷயங்களோடு இஸ்லாத்தை தொடர்புபடுத்தி பேசவேண்டும்.

மிக அழகிய முறையில் அவர்களிடம் தர்க்கியுங்கள் (16:125)

வாய்ப்புகளை உருவாக்கி தொடர்ந்து இஸ்லாத்தை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து வையுங்கள். நேர்வழி (ஹிதாயத்) என்பது அல்லாஹ்வின் கையில் உள்ளது.

நீங்கள் அடிக்கடி சந்திக்கும் நபர் உங்கள் மூலம் இஸ்லாத்தை அறிய விரும்புகிறார் என்றால் அதற்காக முதலில் ஓர் அமைதியான சூழ்நிலையைத் தேர்வு செய்து கொள்ளவேண்டும். வீட்டிலோ, திண்ணையிலோ, மரத்தடியிலோ, ஓர் அமைதியான இடத்தில் அவருடன் உரையாடலாம். அல்லது அருகிலுள்ள பிரசார நிலையத்திற்கு (மர்க்கஸிற்கு) அழைத்து வந்து உரையாடலாம். அது அவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் இடையேயான இடைவெளியைக் குறைக்கக் கூடியதாக இருக்கும். பிரசார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதன் நோக்கமே இது போன்ற பணிகளுக்காகும்.

ஆர்வமுடைய பிறமத நண்பரிடம் மேலோட்டமாக இஸ்லாத்தை நீங்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்றீர்கள். மிக சரளமாக எடுத்துச் சொல்ல நீங்கள் அறிந்திருக்கவில்லை அல்லது எடுத்துச் சொல்லும் திறமை உங்களுக்கு இல்லை என்று நீங்கள் கருதுவீர்களானால், உங்கள் நண்பரை மற்றோர் அழைப்பாளருக்கு அறிமுகப்படுத்தி வைத்து, உபயோகமான உரையாடலைத் தொடர ஏற்பாடு செய்யுங்கள். அல்லது அந்த நண்பரை (மர்க்கஸிற்கு) அழைத்து வந்து அந்நிலையங்களோடு அவருக்கு தொடர்பை ஏற்படுத்தி வையுங்கள்.

பிற மதத்தவர்களோடு தனியாக உரையாடுகிறோம் அல்லது இஸ்லாத்தை அறிமுகப்படுத்துவதற்கென்றே ஏற்பாடு செய்த சிறப்பு நிகழ்ச்சிக்கு அழைத்து வந்திருக்கிறோம். இஸ்லாத்தை அறிந்து கொள்ளும் விருப்பமுடையவர் ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களாக இருந்தாலும் அல்லது பிற மதத்தவர்களுக்கு இஸ்லாத்தை எடுத்துச் சொல்ல ஏற்பாடு செய்யப்பட்ட அரங்ககூட்டமாக இருந்தாலும் அழைப்பாளர் ஒருமுறைப்படுத்தப்பட்ட, சீரான முறையில் இஸ்லாத்தை எடுத்துவைப்பது நலமாகும்.

ஒருவர் நாத்திகராக இருந்தால் அல்லது பல தெய்வக் கொள்கை உடைய இந்துவாக இருந்தால் அல்லது கிறிஸ்தவராக இருந்தால் அவரவருக்கு ஏற்ற விதமாகவும் உரையாட வேண்டும். எல்லோரும் கலந்திருந்தால் அனைவருக்கும் பொதுவான கருத்துக்களைக் கொண்டு உரையாட வேண்டும்.

பிறமதத்தவர்களின் நம்பிக்கையை மனதில் கொண்டு, அழைப்பாளரின் உரையாடல் அல்லது உரை ஒரு நெறிமுறைப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும். அறிமுக உரையானது நடுநிலையோடு பிறரின் இதயங்களைக் காயப்படுத்தாமல் பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

## விளக்கவுரையை அமைத்துக்கொள்ளும் விதம்.

---

### அறிமுக உரை அதன் அடிப்படையும், கால அளவும் :

ம்(அவர்களிடம்) வேதத்தையுடையோரே! நமக்கும் உங்களுக்குமிடையே (இசைவான) ஒரு பொது விஷயத்தின் பக்கம் வாருங்கள்ம். நாம் ஒரே இறைவனை (அல்லாஹ்வை)த் தவிர வேறெவரையும்

வணங்க மாட்டோம். அவனுக்கு எதனையும் இணைவைக்க மாட்டோம். அல்லாஹ்வை விட்டு நம்மில் சிலர் சிலரைக் கடவுளர்களாக எடுத்துக் கொள்ள மாட்டோம் எனக் கூறும்“ (அல்குர்ஆன் 3:64)

இது இறைக் கட்டளை. ஆகவே, இறைவனின் கட்டளைக்கிணங்க ஆரம்பத்தில் இருவருக்கும் பொதுவான விஷயங்களை எடுத்து வைத்து உரையாட வேண்டும். பின்னர் விவேகத்துடன், அழகிய உபதேசத்துடன் இஸ்லாத்தின் சிறப்பை ஏகத்துவத்தை எடுத்துக்கூறி அழைக்க வேண்டும்.

(இதன் பிறகும்) அவர்கள் புறக்கணித்து விட்டால் நிச்சயமாக நாங்கள் (முஸ்லிம்) இறைவனுக்கு கட்டுப்பட்டவர்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்!“ என்று நீங்கள் கூறிவிடுங்கள். (அல்குர்ஆன்3:64)

உரை நிகழ்ச்சிக்காக வருகை தந்தவர்கள் யூதர்களாகவோ, கிறிஸ்தவராகவோ அல்லது இந்துவாகவோ இருந்தாலும் சரி இஸ்லாத்திற்கும் அவர்களுக்கும் இடையேயுள்ள பொதுவான விஷயங்களை எடுத்து வைத்து அறிமுக உரை ஆற்றுவதுதான் சிறப்பு திருக்குர்ஆனின் 3:64 வது வசனம் இதைத்தான் போதிக்கிறது.

இந்த அறிமுக உரை மிகச் சுருக்கமாக இருப்பதே நலம். ஏனெனில் இஸ்லாத்தைப் பற்றிய தவறான எண்ணம் கொண்டிருப்பவர்களுக்கு அவ்வெண்ணம் அவர்களின் மனதை விட்டுப்போகாத வரை, எத்தனை நல்ல கருத்துக்களை இஸ்லாத்திலிருந்து எடுத்து வைத்தாலும் அவர்களின் மனம் ஏற்காது. ஆகவே, அறிமுக உரையை சுருக்கமாக முடித்துக் கொண்டு அவர்களின் தவறான குற்றச்சாட்டுகளுக்கு அறிவுப்பூர்வமான நியாயமான பதில்களை அளிப்பதே சாலச் சிறந்தது.

### தவறான எண்ணங்களைக்களைதல்:

இஸ்லாம் ஓர்அன்னிய மதம் என்கிற எண்ணத்தால்தான் அவர்கள் இஸ்லாத்தைத் தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கிறார்கள்.

இஸ்லாம் ஓர் அன்னியமதமல்ல மிகவும் அன்னியோன்யமான மதம் என்பதற்கு ஆதாரமாக அவர்களின் வேதங்களிலிருந்து ஆதாரங்களை எடுத்துவைத்தும் பேசலாம்.

மதங்களுக்கு இடையிலான ஒப்பீடு எவரையும் கவரும். இந்து வேதங்களுக்கும் இஸ்லாமிய வேதத்திற்கும், கிறிஸ்துவ வேதத்திற்கும் இஸ்லாமிய வேதத்திற்கும் கொள்கை ரீதியாக எவ்வளவு ஒற்றுமைகள் இருக்கின்றன என்பதை உணரும்போது ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவும், நேசத்தையும், பாசத்தையும், நெறி சார்ந்த நெருக்கத்தை உருவாக்கிக் கொள்ளவும் வழி ஏற்படும்.

இஸ்லாத்தின் தத்துவங்களுக்கு ஒத்துப்போகும் வசனங்களை பைபிளிலிருந்தும் இயேசுவின் போதனைகளிலிருந்தும் எடுத்து விளக்கும்போது கிறிஸ்தவர்கள் ஆச்சரியத்துடனும், மன மகிழ்ச்சியுடனும் கவனம் செலுத்து வார்கள். அதுபோல் இந்துவேதங்களிலிருந்தும் புராணங்களிலிருந்தும் ஆதாரங்களை எடுத்துக்காட்டி பேசும்போது இந்துக்கள் ஆச்சரியத்துடனும் அகமகிழ்வுடனும் உன்னிப்பாக கவனம் செலுத்துவர். இதனால் சற்று மனக்கசப்பு நீங்கவும் செய்யும். மதங்களுக்கு மத்தியிலான ஒப்பீடு உரையினால் கேட்பவர்கள் கவனத்தில் தொய்வு ஏற்படாமல் இருக்கும். ஆகவே அறிமுக உரை கண்ணியமான ஒப்பீடாக அமைவதே சிறப்பு.

இன்னும், இஸ்லாமிய அறிமுக உரையில் கண்ணியக் குறைவான வார்த்தைகளை உபயோகிக்கவோ, பிறமத வேதங்களை - கடவுள்களை இகழவோ, தாக்கிப் பேசவோ கூடாது.

“அவர்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவற்றை நீங்கள் திட்டாதீர்கள்“ (அல்குர்ஆன் 6:108) என்ற இறைக் கட்டளையை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

இன்னும் அறிமுக உரையில் இஸ்லாம் மட்டுமே நேரான மார்க்கம், சிறந்த மார்க்கம், இஸ்லாத்தை ஏற்று நடப்பவர்கள் மட்டுமே சுவர்க்கம் சென்றிட முடியும் என்று தர்க்கரீதியாக எடுத்துச் சொல்லிட வேண்டும் என நினைக்காதீர்கள். இதனால் கேட்பவர்களுக்குத் தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு மேற்கொண்டு உங்கள் பேச்சில் கவனம் செலுத்த மாட்டார்கள்.

இஸ்லாம் தான் ஏக இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் (- தவ்ஹீத், ரிஸாலத், ஆகிரத்) ஏகத்துவம், தூதுத்துவம், மறுமை வாழ்வு என்பது பற்றி நேரடியாக இறைமார்க்கம் சார்பாகவே பேசிக் கொண்டே செல்வோமானால் சத்தியத்தை எடுத்து வைத்த பணியும் முடிந்து விடும், இறைவன் புறத்திலிருந்து நமக்கு கிடைக்க வேண்டிய நற்கூலியும் கிடைத்துவிடும். ஆனால், இஸ்லாத்தை விவேகமாக (ஹிக்மத்தாக) எடுத்துரைத்ததாகது இன்னும் அழைப்புப்பணியில் எதிர்பார்த்த இலக்கை அடையவும் முடியாது. தொடர்ந்து முக்கியமாகச் சொல்லி முடிக்க வேண்டிய விஷயங்களையும் கூட சொல்ல இயலாது.

இஸ்லாமிய அறிமுக உரை என்றால் குர்ஆனை உயர்த்திப்பேசுவது, இஸ்லாத்தைப் புகழ்ந்து பேசுவது, மற்ற மதங்களையும் வேதங்களையும் கடவுளையும் விமர்சிப்பதுதான் என்று சில பேச்சாளர்கள் எண்ணுகின்றனர். இவ்வாறு பேசுவதன் விளைவு மற்ற மதத்தினருக்கும் இஸ்லாத்திற்கும் உள்ள இடைவெளி அதிகமாகி விடுகிறது.

இஸ்லாம் ஒன்று மட்டுமே ஏக இறைவனின் மார்க்கம், குர்ஆன் மட்டுமே தூய்மையான இறைவேதம், இறுதி தூதர்(ஸல்) அவர்களை ஏற்று அவரைப் பின்பற்றி நடக்காத எவரும் சுவர்க்கம் செல்ல முடியாது என்பதை நாமறிவோம். இதை ஆரம்ப நிலையில் அவர்களிடம் எடுத்து வைக்கும்போது அவர்களின் மனம் உடனடியாக அதை ஏற்காது.

ஏற்கெனவே இஸ்லாத்தின் மீது கொண்டுள்ள தவறான குற்றச் சாட்டுகளுடன் நமது உரையும் இணைக்கப்பட்டு முஸ்லிம்கள் என்றால் மதவெறியர்கள் தானோ? என்று தவறாக எண்ணி, இஸ்லாத்தை விட்டு வெகு தூரம் விலகிச் சென்றுவிட வாய்ப்பிருக்கிறது.

ஆகவே, அறிமுக உரையானது அறிவுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும். மற்ற மதத்தினர் மிகவும் அன்னியோன்னியமாகக் கருதும் நமது மார்க்க உரையானது வேறுபட்ட கொள்கையுடையவர்களின் மனநிலையை ஒரு நடுநிலைக்குக் கொண்டு வருவதாக இருக்க வேண்டும்.



## விளக்கத்தை அளிக்கும் முன் செய்யும் விவேகச் செயல்:

அறிமுக உரைக்கு அடுத்த உரையானது அல்லது உரையாடலானது இஸ்லாத்தின் மீதான தவறான குற்றச்சாட்டுகளுக்கு அழகிய முறையில் விளக்கமளிக்கும் வகையில் இருக்க வேண்டும்.

இஸ்லாத்தை விமர்சிப்பவர்களின் விமர்சனத்திற்கும், குற்றஞ்சாட்டுபவர் களின், குற்றச்சாட்டிற்கும், அழகிய முறையில் விளக்கங்களைக் கொடுக்க வேண்டும். குற்றஞ்சாட்டுபவர்களில் இது நியாயம். இது அநியாயம் என்று முன்னதாகவே முடிவெடுத்து வைத்திருப்பார்கள். அவர்கள் தீர்மானத்திற்கு

மாற்றமான விஷயங்களை இஸ்லாம் கூறும்போது இஸ்லாத்தின் மீது சாடுகிறார்கள். இது மனித இயல்பு. அவர்களின் அறிவுக்கு ஏற்ப குற்றஞ் சாட்டுகிறார்கள். இதைத் தவறு என்று கூட கூறிடமுடியாது என்பதை குர்ஆனில் இடம் பெற்றுள்ள மூஸா(அலை) கிள்ர்(அலை) அவர்கள் உரையாடல் நமக்கு விளக்குகிறது.

உங்களுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்ட நன்மையானவற்றை நீங்கள் எனக்குக் கற்பிக்கும் பொருட்டு, உங்களை நான் பின்தொடரட்டுமா?ம் என்று (ம்ள்ர் (அலை) அவரிடம் மூசா கேட்டார்.

(அதற்கு அவர்) நிச்சயமாக உங்களால் என்னுடன் பொறுமையாக இருக்க இயலாது!ம் எனக் கூறினார்.

(ஏனெனில்) எதைப்பற்றி உமக்கு முழுமையான ஞானம் இல்லையோ, அதில் நீர் எவ்வளவு பொறுமையாயிருப்பீர்! (என்று கேட்டார்)“

(அதற்கு) மூசா, இன்ஷா அல்லாஹ்! நான் பொறுமையுள்ளவனாகவும், எவ்விஷயத்திலும் உமக்கு மாறு செய்யாதவனாகவும் இருப்பதை நீங்கள் விரைவில் காண்பீர்கள்“ என்று (மூசா) சொன்னார்.

(அதற்கு அவர்) நீர் என்னைப் பின்தொடர்வதாயின் எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும் நானாகவே அதைப்பற்றி உமக்கு அறிவிக்கும் வரை - நீர் என்னிடம் கேட்கக் கூடாதும் என்று சொன்னார்.

இவ்வளவு தெளிவான உரையாடல் உறுதிமொழிக்குப்பின் கிள்ர் (அலை) அவர்களைத் தொடர்ந்து சென்ற மூசா அவர்களால், அவர் தொடர்ந்து செய்த காரியங்களைச் சரிகாண முடியவில்லை. ஜீரணிக்க முடியவில்லை. ஆத்திரப்பட்டு தான் கொடுத்த வாக்குறுதியையும் மறந்து ஆட்சேபம் தெரிவித்தார்கள் (என்பதை இறைவசனம் 18:71-78 விவரிக்கிறது) காரணம் என்ன? மூசா(அலை) அவர்களது அறிவுக்கு தெளிவு கிடைக்காத காரியங்களை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆயினும் பின்னால் அவற்றிற்குரிய விளக்கம் கிடைத்தபின் அவற்றைச் சரியென ஏற்றுக்கொண்டார்கள்.

இதிலிருந்து நாம் பெறும் படிப்பினை அல்லாஹ்வின் புறத்திலிருந்து சிறப்பான ஞானத்தை பெற்றிருந்த கிள்ர்(அலை) அவர்களின் செயல்பாடுகளில் குறைகாணும் மூஸா நபி அவர்கள் ஆத்திரத்துடனே ஆட்சேபனை தெரிவிக்கிறார்கள். குற்றஞ்சாட்டுகிறார்கள். அதற்கான தெளிவு கிடைத்த பின்னர் சாந்தமாகிறார். ஆகவே தெளிவு கிடைக்காதவர்கள் குற்றஞ்சாட்டுவது இயல்பே. இதைக் கருத்தில் கொண்டு, இஸ்லாத்தின் மீது குற்றஞ்சாட்டும் பல்வேறு கொள்கையுடையவர்களின் மீது ஆத்திரம் கொள்ளாது, அமைதியுடன், அன்பாக, மலர்ந்த முகத்துடன் பதிலளிக்க வேண்டும்.

இஸ்லாம் பற்றிய தவறான எண்ணங்கள் ஒருவர் (மனதில்) இருந்தாலே போதும். இஸ்லாம் பற்றிய எத்தனை நன்மைகளை நாம் எடுத்துவைத்தாலும் அவர்கள் மனம் ஏற்றுக்கொள்ளத் தயங்கும். ஒரு பாத்திரம் நிறைய ஏற்கனவே நீர் அல்லது வேறு பொருள் இருக்கும் போது அதன் மேல் எவ்வளவு நீர் ஊற்றினாலும் நீர் வழிந்து வெளியேறிவிடும். ஏற்கனவே இருக்கும் நீரை அல்லது பொருளை வெளியேற்றிவிட்டு, பாத்திரத்தை காலியாக்கிய பிறகு நீரை ஊற்றுவது தான் அறிவுடமை.

அதுபோல் மாற்றார் மனதிலுள்ள தவறான கசப்புணர்வுகளையும், எண்ணங்களையும் முதலில் நீக்கி விட்டு பிறகு இஸ்லாத்தை எடுத்துரைத்து அழைப்பது தான் ‘ஹிக்மத்‘ எனும் விவேகமான செயலாகும்.

### விமர்சனங்களின் பட்டியல்:

மேல்நாட்டு யூத கிறிஸ்தவ பிரசார சாதனங்களும், இந்தியாவிலுள்ள இந்து உச்ச சாதியினர் குழுக்களும் துருவித்துருவி ஆராய்ந்து இஸ்லாத்தின் மீது சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகள் நூற்றுக்கணக்கானவை. இது உலகம் முழுவதும் பொதுவாக உள்ளது. இன்னும் அந்தந்த இடம் மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்து இவை சற்று கூடலாம். அவற்றில் சில குற்றச்சாட்டுகள் கீழ் வருமாறு:

1. இஸ்லாம் பல தாரமணத்தை அனுமதிப்பது பெண்ணினத்திற்கு செய்யும் அநீதியாகும்?

2. ஆண்களுக்குப் பலதார மணத்தை அனுமதித்த இஸ்லாம், பெண்களுக்கு மணக்க அனுமதிக்காதது ஏன்?

3. பெண்களை விட ஆண்கள் மேலானவர்கள் என்ற இஸ்லாத்தின் சட்டம் பெண் அடிமைத்தனத்தைப் பேணுகிறது ஏன்?

4. வாரிசுரிமையில் ஆணுக்கு கிடைக்கும் பங்கில் பாதி பங்கே பெண்களுக்கு என்று கூறி இஸ்லாம் பெண்களுக்குச் சம உரிமையை மறுப்பது ஏன்?

5. சாட்சியளிக்கும் விஷயத்தில் ஓர் ஆணின் சாட்சிக்கு சமமானது என்று கூறி ஆண்களை விட பெண்களின் அறிவைக் குறைவாக மதிப்பிடுவது ஏன்?

6. இஸ்லாம், பெண்களுக்கு குடும்பத்திலும் நாட்டிலும் தலைமைப் பொறுப்பை கொடுக்கத் தயங்குவதேன்?

7. தலாக் - தலாக் - தலாக் என்று மிகச்சாதாரணமாகக் கூறி விவாகரத்து செய்வது பெண்களுக்கு இழைக்கும் கொடுமையல்லவா?

8. விவாகரத்து விஷயத்தில் ஆண்களுக்கு வழங்கப்பட்ட உரிமை போல் ஏன் பெண்களுக்கும் வழங்கப்படவில்லை?

9. விவாகரத்து செய்யப்பட்ட பெண்களுக்கு ஜீவனாம்சம் கொடுக்க இஸ்லாம் மறுப்பதேன்?

10. முஸ்லிம்கள் பெண்களை பள்ளிவாசலுக்குள் அனுமதிப்பதில்லை ஏன்?

(குறிப்பு: மேற்கண்ட வினாக்களுக்குரிய விளக்கத்தை ஆசிரியரின் “பெண்“ எனும் நூலில் காணவும்.)

11. முஸ்லிம்கள் பொது சிவில் சட்டத்தை எதிர்ப்பதேன்?

12. இந்தியாவில் இஸ்லாமிய குற்றவியல் சட்டம் அமுலில் இல்லாதிருக்க முஸ்லிம் தனியார் சட்டம் மட்டும் அமுலில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவது ஏன்?

13. குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை முஸ்லிம்கள் ஏற்க முன்வராதது ஏன்?

14. இஸ்லாம் ஏன் வட்டியைத் தடை செய்துள்ளது?

15. இஸ்லாம் வாளால் வளர்ந்த மதம் தானே?

16. பல நாடுகளில் முஸ்லிம் தீவிரவாத இயக்கங்கள் இருப்பதும் முஸ்லிம்களே தீவிரவாதிகளாக இருப்பதும் இஸ்லாம் பயங்கரவாதத்தை தூண்டுகிறது எனக் கொள்ளலாமா?

17. மத அடிப்படை வாதம் என்பது மத சகிப்புத்தன்மைக்கு எதிரானது. முஸ்லிம்கள் மத அடிப்படைவாதிகளாக உள்ளனரே ஏன்?

18. ஜிகாத்-(புனிதப் போர்) செய்யவாருங்கள் என்னும் அழைப்பு பயங்கரவாதத்திற்கு விடும் அழைப்பு தானே?

19. இஸ்லாம் ஒரு நல்ல மார்க்கம். ஆனால், பெரும்பான்மை முஸ்லிம்கள் நல்ல நடத்தையுள்ளவர்களாக இல்லையே ஏன்?

20. முஸ்லிம் அல்லாதவர்கள் மீது 'ஜிஸ்யா - வரி' விதிக்கும்படி குர்ஆன் கூறுகிறதே இது சமூக நீதியா? அநீதியா?

21. அவ்ரங்கசீப் இந்துக்கள் மீது ஜிஸ்யா வரிவிதித்து தம் மதவெறியை வெளிப்படுத்தியதற்கு உங்கள் பதில் என்ன?

22. திருடினால் கையை வெட்டு, விபச்சாரம் செய்தால் சவுக்கால் அடி, கல்லெறிந்து கொல் என்னும் இஸ்லாமிய குற்றவியல் சட்டங்கள் காட்டுமிராண்டித் தனமாக இல்லையா?

23. முஸ்லிம் அல்லாதவர்களை 'கா∴பிர்' என்று இழிவாகக் கூறுவதேன்?

24. திருக்குர் ஆனை முஸ்லிம் அல்லாதவர்கள் தொட அனுமதிக்காததேன்?

25. பிறமதத்தவர்களை பள்ளிவாசலுக்குள் அனுமதிப்பதில்லையே ஏன்?

26. முஸ்லிம்களில் ஒரு பிரிவினரை மற்றொரு பிரிவினர் பள்ளிவாசலுக்குள் அனுமதிப்பதில்லையே ஏன்.

27. க∴அபாவிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் முஸ்லிம் அல்லா தவர்கள் செல்வதற்கு அனுமதிக்காதது ஏன்?

28. முஸ்லிம்கள் - முஸ்லிம் அல்லாதவர்களைப் பார்த்தால், அஸ்ஸலாமு அலைக்கும்ம் என்று கூறுவதில்லையே ஏன்?

29. சவுதி அரேபியாவில் பிற மதங்களின் வழிபாட்டு ஸ்தலங்கள் (சர்ச், கோவில்) கட்ட அனுமதிக்கப்படாதது ஏன்?

30. உருவ வழிபாட்டை எதிர்க்கும் முஸ்லிம்கள் குறிப்பிட்ட திக்கை (திசையை) நோக்கி அல்லவா வணங்குகிறார்கள்?

31. சிலைவணக்கத்தை எதிர்க்கும் முஸ்லிம்கள் கஅபாவிலுள்ள கருங்கல்லை இது வணக்கமில்லையா? முத்தமிடுகிறார்களே

32. இஸ்லாம் இயற்கையான முறையிலான மார்க்கம் என்கிறீர்கள் இயற்கைக்கு மாற்றமான முறையில் 'கத்னா' செய்வது ஏன்?

33. சிலை வழிபாட்டை எதிர்க்கும் முஸ்லிம்கள் சமாதி வழிபாட்டை ஆதரிப்பது ஏன்?

34. பழனி ஆண்டவர், திருப்பதி ஆண்டவர் என்று பல தெய்வங்கள் இருப்பது போல் நாகூர் ஆண்டவர், மைதீன் ஆண்டவர் என்று முஸ்லிம்களிடத்திலும் பல தெய்வக்கொள்கை தானே உள்ளது?

35. தொழுகைக்கான அழைப்பு இன்னும் வணக்க வழிபாட்டு முறைகள் யாவும் அரபுமொழியில் அமைந்திருப்பது அன்னிய மொழி விசுவாசத் தையும், மதநெறியையும் அல்லவா காட்டுகின்றன?

36. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம்கள் அரபு மொழியில் பெயர்களை வைத்துக் கொள்வது ஏன்?

37. எத்தனையோ மதங்கள் இந்தியாவில் தோன்றியிருக்க அவற்றைப் புறக்கணித்து விட்டு அரபு நாட்டு மதத்தைப் பின்பற்றுவது ஏன்?

38. அறிவியல் புரட்சி நடத்தும் 21-ம் நூற்றாண்டில் அறியாமைக் கால 6-ம் நூற்றாண்டின் மதம் எப்படிப் பொருந்திப் போகும்?

39. நீங்கள் ஏன் தொழுகையின் போது கஅபாவை முன்னோக்குகின்றீர்கள்? இறைவன் கஃபாவில் தான் இருக்கின்றானா?

40. இந்துக்கள் கற்பகிரகத்தை சுற்றுவது போன்று தானே முஸ்லிம்களும் கஃஅபாவைச் சுற்றுகிறார்கள்?

41. இறைவன் சர்வசக்தியும் சர்வஞானமும் உள்ளவன் என்றால், உலகத்தில் மனிதர்கள் எல்லாம் எப்படியிருக்க வேண்டும், எப்படி வாழவேண்டும் என்று இறைவன் முன் கூட்டியே அறிந்திருப்பான் அல்லவா? ஒருவன் எப்படி வாழவேண்டும் என்று முன்கூட்டியே இறைவன் நிச்சயித்திருக்கும் படியே வாழ்கிறான் என்றால், மனிதன் சுதந்திரமற்றவன் அல்லவா? எனவே, நிர்ப்பந்தமாக செய்யும் கர்மங்களின் அடிப்படையில் மனிதனை தண்டிப்பது நீதியாகுமா?

42. இந்தியாவில் இந்துக்களாக இருந்தும், பெரும்பான்மை எல்லா மதத்தவர்களுக்கும் சம உரிமை வழங்கும் மதச்சார்பின்மை (secularism) கொள்கை நிலைத்து நிற்கிறது. மாறாக, பெரும்பான்மையாக முஸ்லிம்கள் இருந்தால் இந்தியா ஒரு இஸ்லாமிய அடிப்படையிலான நாடாகவும், மற்ற மதத்தினர் இரண்டாம் தர குடிமக்களாகவோ அல்லது நிர்ப்பந்த மதமாற்றம் செய்யப்படலாம் அல்லவா?

43. தத்துக்குழந்தை சொந்தக் குழந்தையாகாது. அதற்கு வாரிசுரிமை கிடையாது என்று இஸ்லாம் கூறுவது நியாயமா? அனாதைகளை ஆதரிக்கவேண்டும் பாதுகாக்க வேண்டும் என்றெல்லாம் கூறிவிட்டு, சொத்துரிமையற்றவர் என்று கூறுவது எப்படி நியாயமாகும்?

44. எல்லா மதங்களும் நன்மையைத் தான் சொல்கிறது. அப்படியிருக்க ஏன் குறிப்பிட்ட ஒரு மதத்தைப் பின்பற்ற வலியுறுத்துகின்றீர்கள்?

45. எம்மதமும் சம்மதம் என்பதும் ஒரு சிறந்த கொள்கையல்லவா! அதை ஏற்க மறுப்பதேன்?

46. தற்கால ஜனநாயகம், (கம்யூனிசம், சோஷலிஸம், கேப்பிட்டலிஸம்) பொதுவுடைமை, சமத்துவம், முதலாளித்துவம் இவற்றை விட இஸ்லாமிய அரசியல் பொருளாதாரம் எவ்வகையில் உயர்ந்தது என்கிறீர்கள்?

47. ஜீவகாருண்யம் குறித்து இஸ்லாத்தின் நிலை என்ன?

48. ஆடு, மாடு, கோழி போன்ற உயிரினங்களின் கழுத்தைக் கத்தி கொண்டு அறுத்துச் சாகடிப்பது ஏன்?

49. முஸ்லிம் அல்லாதவர்கள் உயிரினங்களை அறுத்துச் சாகடித்துச் சமைத்தால் அதை உண்ண மறுப்பது ஏன்?

50. பன்றியை - பன்றிக்கறியை அதிகமாக வெறுப்பதேன்?

51. மருந்துக்குக் கூட மதுவை உபயோகப்படுத்தக்கூடாது என்று கூறுவதேன்?

52. தான் திருமணம் செய்யப்போகும் பெண்ணை ஓர் ஆணும், அவ்வாறே தான் திருமணம் செய்ய போகும் ஆணை ஒரு பெண்ணும் பார்த்துக் கொள்வதை அனுமதிப்பதில்லையே ஏன்?

53. முஸ்லிம்களே அதிக வரதட்சணை வாங்குகிறார்கள் அப்படியானால், இஸ்லாம் வரதட்சணையை ஊக்குவிக்கிறதா?

54. இஸ்லாத்தில் சாதிகள் இல்லை என்கிறீர்கள். ஆனால், அதையொட்டி ஷியா, சுன்னி, ஷாபி, ஹனபி என்னும் பிரிவுகளும், அவர்களுக்கிடையே சண்டைகளும் இருக்கிறதே ஏன்?

55. இந்து மத கிரந்தங்களை தெய்வீக கிரந்தங்கள் என்று ஒப்புக் கொள்கின்றீர்களா?

56. பைபிளை இறைவேதம் என்று ஒப்புக்கொள்வீர்களா?

57. மதம் தெய்வீகமானதென்றால் பலமதங்கள் ஏற்பட்டது ஏன்? மாறுபட்ட தேசத்தினருக்கும், நிறத்தினருக்கும், மொழியினருக்கும் மாறுபட்ட மதத்தை வழங்கியது இறைவனா? இறைவன் ஒருவன் என்றால், அவனிடமிருந்து மாறுபட்ட பலமதங்கள் வந்தது (தோன்றியது) எப்படி?

58. நதிகள் பல இடங்களிலிருந்து புறப்பட்டுவந்தாலும் அவை கலப்பது கடலிலாகும். அதுபோல் மனிதன் மாறுபட்ட மதத்தில் இருந்தாலும் அவர்களை கொண்டு சேர்ப்பது இறைவனிடமாகும். அதனால் மதம் எதுவானாலும் பரவாயில்லை மனிதன் நல்லவனாக இருந்தால் போதுமேம்?

59. எந்த மதத்தை வேண்டுமானலும் ஏற்றுக் கொள்ளலாம் என்று குர்ஆனே கூறுகிறதே? ஈமான் கொண்டவர்களாயினும், யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும் நிச்சயமாக எவர் அல்லாஹ்வின் மீதும் இறுதிநாள் மீதும் நம்பிக்கை கொண்டு ஸாலிஹான அமல்கள் (நற் செயல்கள்) செய்கிறார்களோ அவர்களின் (நற்) கூலி நிச்சயமாக அவர்களுடைய இறைவனிடம் இருக்கிறது. மேலும், அவர்களுக்கு யாதொரு பயமும் இல்லை அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள் (2:62) இதுபற்றி என்ன கூறுகின்றீர்கள்?

60. இயேசு கடவுளின் குமாரன் என்று கிறிஸ்தவர்களும், உங்களுடைய முஹம்மத் நபி இறைவனுடைய இறுதித் தூதர் என்று நீங்களும் வாதிக்கின்றீர்கள். இதெல்லாம் மத ஸ்தாபகர்களைப் பெருமைப்படுத்திக் கொள்ளும் வெறும் உரிமை வாதம் மட்டுமேயாகுமா?

61. முஸ்லிம்கள் ஏன் தொப்பியும், தாடியுமாக வித்தியாசமான தோற்றத்தில் காட்சியளிக்கிறார்கள்?

62. ஆடல், பாடல், இசையை இஸ்லாம் அனுமதிப்பதில்லையே ஏன்?

63. இறைவன் உண்டு என்பதற்கு என்ன ஆதாரம்?

64. இறைவன் ஒருவன் தான் உண்டு என்பதற்கும் என்ன ஆதாரம்?

65. குர்ஆன் இறைவாக்கு என்பதற்கு என்ன ஆதாரம்?

66. மரணத்திற்குப் பின் மறுஉலக வாழ்க்கை உண்டு என்பதற்கு என்ன ஆதாரம்?

67. இறைவன் உண்டு என்கின்றீர்களே, எங்கே காட்டுங்கள் பார்ப்போம்?

68. மனிதர்களைப் படைத்தது இறைவன் என்றால், இறைவனைப் படைத்தவன் யார்?

69. இறைவன் உருவமற்றவன் என்கின்றீர்கள்! அப்படியாயின் அவன் மாயையா சூனியமா? தத்துவமா?

70. ஏக இறைவனை அவன் என்கின்றீர்களே! அவன் ஆண்வர்க்கத்தைச் சார்ந்தவனா?

71. இறைவன் கருணையுள்ளவன், நீதிமான் என்றால், எதற்காக சிலரை ஏழையாகவும், சிலரைப்பணக்காரனாகவும், சிலரை ஆரோக்கியமாகவும், சிலரை நோயாளியாகவும், சிலரை ஊனமுற்றோராகவும் படைத்து பாரபட்சம் காட்டுகிறான்?

72. வறுமையும், வேலையில்லா திண்டாட்டமும் தான் சமூகத்தில் மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆனால், இஸ்லாமிய அடிப்படை வாதிகளுக்கு பலதெய்வக்கொள்கை தான் பெரிய பிரச்சினையாக தெரிகிறது. இது ஏன்?

73. படைப்பாளன் இறைவன் என்னும் நிலைமாறி, விஞ்ஞானிகளும் குளோனிங் முறையில் படைக்கத்துவங்கி விட்டார்களே?-

74. மரணித்தவர்களை புதைக்கிறார்கள் அல்லது எரிக்கிறார்கள் அல்லது பிற உயிரினங்களுக்கு உணவாகப் போடுகிறார்கள். இதனால் மண்ணாக, சாம்பலாக, உணவாக உருமாறிப் போன உடலை எப்படி உயிர்கொடுத்து எழுப்ப முடியும்?

75. முஸ்லிம்கள் மட்டுமே சொர்க்கத்தில் நுழைவார்களா?

76. இஸ்லாம் கூறும் சொர்க்க வாழ்வு இவ்வுலக வாழ்வு போன்றதா?

77. சொர்க்கத்தில் விரும்பியது கிடைக்குமென்றால் அலுப்பு ஏற்படாதா?

78. ஒருவர் இறைவனையும் மறுமையையும் நம்புவதில்லை. அதே சமயம் மது அருந்துவது, விபச்சாரம் செய்வது போன்ற கெட்டபழக்கங்களும் இல்லை. யாருக்கும் தீங்கு செய்ததுமில்லை. தன்னால் இயன்ற அளவு பிறருக்கு உதவி செய்தே வாழ்கிறார். இத்தகையோருக்கு சொர்க்கம் கிடைக்குமா?

79. குர்ஆன், பைபிளிலிருந்து எடுக்க(காப்பியடி)க்கப்பட்டது போல் உள்ளதே?

80. குர்ஆன், தவிர மற்ற மதங்களின் வேதங்கள் இறை வேதமா? இல்லையா?

81. முஸ்லிம்களிடம் தான் சிறந்த வழிகாட்டல் உள்ளதா? மற்றவர்களிடம் இல்லை என்கின்றீர்களா?

82. மதம் கடவுள் ஒன்றும் தேவையில்லை, மனசாட்சிக்குக் கட்டுப்பட்டாலே போதும் என்கிறோம்? இது சரியா?

83. பரிணாம வளர்ச்சியில் வந்த குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்று விஞ்ஞானம் கூறுகிறது. தானே தோன்றிய மனிதனுக்கு மேலான எந்த சக்தியும் இல்லை என்பதுதானே விஞ்ஞானத்திற்கு ஏற்புடையது?

84. லகும் தீனுக்கும் வலியதீன் பிறமத வழிபாட்டு விஷயங்களில் தலையிட கூடாது என்று இஸ்லாம் கூறியிருக்க் பள்ளிவாசலுக்கு முன்னால் கொட்டடித்து, சீட்டியடித்து, கைதட்டிச் சென்றால், அதை முஸ்லிம்கள் தடுக்க முற்படுவது ஏன்?

85. குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்று விஞ்ஞானம் கூறுகிறது் மண்ணிலிருந்து படைக்கப்பட்டவன் மனிதன் என்று குர்ஆன் கூறுகிறது எதை ஏற்பது? எதை விடுவது?

86. சங்கீதம் - ஆத்ம திருப்தியளிக்கிறது அதை இஸ்லாம் தடைசெய்வதேன்?

(குறிப்பு: மேற்கண்ட வினாக்களுக்குரிய விளக்கங்களை http://www.a1realism.com/tamil/misunderstood/index.htm எனும் பகுதியில் பார்க்கவும்.)

87. அல்லாஹ் குர்ஆனில் தன்னை 'தாம்' என்கிறானே அப்படியானால் பல அல்லாஹ்கள் உண்டா?

88. அல்லாஹ்வை 'அவன்' என்று குறிப்பிடுகின்றீர்களே அப்படியானால் அல்லாஹ் ஆண்பாலைச் சார்ந்தவனா?

89. அன்றைய தினம் 1000 ஆண்டுகளுக்குச் சமம் என்று ஓரிடத்திலும் ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்குச் சமம் என்று மற்றொரு இடத்திலும் கூறுகிறது ஏன் இந்த முரண்பாடு?

அழைப்பாளர்கள் இந்த விமர்சனங்களுக்கான தெளிவான பதிலைத் தெரிந்துவைத்திருக்க வேண்டும். வேறு கொள்கையினர், மதத்தினரில் சுமார் 75 சத விம்தத்தினர் மனதில் இதுபோன்ற குற்றஞ்சாட்டுகள் இருக்கவே செய்கின்றன. (மீடியாக்களும்) தினமும் இந்த குற்றஞ்சாட்டுகளை செய்திச் சாதனங்களின் மூலம் தொடர்ந்து கூறி இஸ்லாத்தை தவறாக விமர்சித்து வருகின்றன.

மேலும், இஸ்லாத்தை அரைகுறையாக விளங்கிக் கொண்டவர்கள் தவறான விமர்சனங்களை இஸ்லாத்தின் மீதும் இறை வேதத்தின் மீதும் கூறுகின்றனர். அவைகளும் பல உண்டு. அவைகளுக்குரிய விளக்கங்களைத் தெரிந்து வைத்திருப்பதும் அவசியம் ஆகும்.

90. முஸ்லிம்கள் அல்லாஹ்வை உருவமற்றவன் என்கிறார்கள். ஆனால், குர்ஆன் அல்லாஹ்வுக்கு கைகள், முகம், இருப்பதாகக் கூறுகிறதே?

91. அல்லாஹ்வை ரஹீம், கரீம் என்று குர்ஆன் கூறுகிறது. இத்தகைய சிறப்புப் பண்புடைய இறைவன் மனிதர்களை வதைக்க நரகைப் படைத்தது ஏனோ?

92. அடிமைப்பெண்களை அனுபவிக்க குர்ஆன் அனுமதியளிப்பதானது அடிமைத்தனத்தை ஊக்குவிப்பதாகவும், மனைவியல்லாதவரோடு கூடுவதை அனுமதிப்பதாகவும் தெரிகிறதே?

93. அல்லாஹ் யாதொரு தேவையுமற்றவன் என்றால் எதற்காகக் குர்பானி கொடுக்கின்றீர்கள்?

94. புதிய வெளிப்பாடு முந்தைய வெளிப்பாடுகளை உண்மைப்படுத்துகிறது என்று 2:97-லும், பதிலாக வைக்கப்படுகிறது என்று 16:101-லும் கூறப்படுகிறது. இவைகள் மத்தியில் முரண்பாடுள்ளதே?

95. குர்ஆன் தெளிவான அரபுமொழியிலானது என்று 16:103-ல் கூறப்படுகிறது. ஆனால், குர்ஆனில் பல அரபியல்லாத பதங்களும் உபயோகிக்கப்பட்டதாக காணமுடிகிறதே? இது முரண்பாடல்லவா?

96. குர்ஆனைப் பற்றி குர்ஆன், நிச்சயமாக இது முன்னோர்களின் வேதங்களிலும் இருக்கிறது (26:196) என்று கூறுகிறது. ஹிப்ரு கிரேக்கிலும் எழுதப்பட்ட முந்தைய வேதகிரந்தங்களில் குர்ஆன் அடங்கியுள்ளது என்று கூறுவது பொருத்தமானது தானே?

97. கிறிஸ்தவர்கள் பயப்படவோ துக்கப்படவோ வேண்டியதில்லை என (5:69)-ம் வசனம் கூறுகிறது. இதற்கு முரணாக சுவர்க்கம் அவர்களுக்கு தடுக்கப்பட்டுள்ளது என்று (5:72)-ம் வசனம் கூறுகிறது. இதில் எது சரி?

98. ஒருவனுடைய எதிர்காலம் குறித்து முன்பே அறிய முடியாது என்று இஸ்லாம் கூறுகிறது. ஆனால், பிறந்த நட்சத்திரத்தை வைத்து எதிர்கால பலனை ஜோதிடர்கள் கூறுகிறார்கள். அது பல சந்தர்ப்பங்களில் பலிக்கிறதே?

99. சொர்க்கத்தில் ஆண்களுக்கு ஹு ருல்ஈன் பெண்கள் வழங்கப்படும் என்றுள்ளது, அத்தகைய துணை பெண்களுக்கும் வழங்கப்படுவதாக குர்ஆனில் எங்குமில்லையே?

100. இஸ்லாம் ஆண்ஆதிக்கத்தை ஆதரிக்கவல்லவா செய்கிறது? குர்ஆனின் 4-ம் அத்தியாயம் 34 - 6 வசனம் இதற்கு அத்தாட்சியல்லவா?

101. ஆண் ஆதிக்கம் இல்லையென்றால் ஏன் பெண்கள் இறைத்தூதர்களாக நியமிக்கப்படவில்லை?

102. ‘கா∴பிர்களைக் கண்ட இடத்தில் வெட்டிக் கொல்லுங்கள்‘ என்று குர்ஆன் (2:191) கூறுவது பற்றிய விளக்கம் என்ன?

103. நபிகள் நாயகம் (ஸல்) அதிகமான பெண்களைத் திருமணம் செய்து கொண்டது ஏன்?

104. வாழ்நாளெல்லாம் இஸ்லாத்தைப் போதிப்பதிலே காலத்தைக் கழித்த நபிகள் நாயகம்(ஸல்) குடும்ப வாழ்க்கை செலவினங்களுக்கு என்ன செய்தார்கள்?

105. பல தூதர்கள் வந்ததால் தானே பல மதங்களும் பல குழப்பங்களும் தோன்றின, இறைவன் ஒரே தூதரை மட்டும் அனுப்பி நிறுத்தியிருக்கலாமே?

106. ‘யூத கிறிஸ்தவர்களை (நண்பர்களாக) பாதுகாவலர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டாம்! அப்படிச் செய்பவர்கள் அவர்களில் ஒருவராக ஆகிவிடுகிறார்‘ என்று குர்ஆன் (5:51) கூறி பகைமைப் பாராட்டுகிறதே?

107. வணக்கத்திற்குரியவன் இறைவன் ஒருவனே என்றிருக்க வானவர்களையும், இப்லீஸையும் நோக்கி, ஆதமுக்கு ஸஜ்தாச் செய்யச் சொன்னது ஏன்?

108. குர்ஆன் கண்ணியமிக்க நல்ல எழுத்தாளர்களால் எழுதப்பட்ட வேதம் (80:15, 16) என்று குர்ஆனே கூறுகிறது. வேதம் மனிதர்களால் எழுதும்போது சேர்த்தல் குறைத்தல் இருக்குமல்லவா?

109. ஷிர்க் என்னும் பெரும்பாவம் மன்னிக்கப்படாத பாவம் என்று சிலவசனங்கள் (4:48, 4:116) கூறுகிறது. இதற்கு மாற்றமாக ஷிர்க் செய்தவர்களையும் அல்லாஹ் மன்னிப்பான் என்று (4:153, 25:68-71) வசனங்கள் கூறுகிறதே. இது முரண்பாடு அல்லவா?

110. மூசாவின் ஜனன காலத்திலே இஸ்ரவேலர்களுக்கு பிறக்கும் குழந்தைகளை கொன்றொழிக்க ∴பிர்அவ்ன் கட்டளையிட்டன், என்று 20:39 வசனங்களில் கூறப்பட்டுள்ளது. இதற்கு முரணாக 40:23 - 25 வசனங்களில் மூசா தூதரான பின்பே அத்தகைய கட்டளை பிறப்பித்ததாக கூறப்பட்டுள்ளது. இதில் எது சரியானது?

111. மதுபானம் சைத்தானிடமிருந்து வந்துள்ள அருவருக்கத்தக்க செயல் என்று குர்ஆன் 5:90 -ல் கூறுகிறது. ஆனால், சுவர்க்கத்தில் மதுரச அருவிகள் உண்டென்று 47:15-ல் கூறுகிறது. அருவருக்கத்தக்க பொருள் சுவர்க்க வாசிகளுக்கு வழங்கப்படும் என்பது எப்படி பொருத்தமுடையதாகும். இது முரண்பாடல்லவா?

112. வானவர்கள் இறைவனின் கட்டளைக்கு மாறுபடுவதில்லை என்று 16:49, 50 வசனங்களில் கூறுவதற்கு மாற்றமாக, ஆதத்திற்கு ஸஜ்தா செய்யும்படி மலக்குகளிடம் கூறியபோது இப்லீஸ் முரண்பட்டான் என்று 2:34 வசனம் கூறுகிறதே? இந்த முரண்பாடு குறித்து என்ன கூறுகின்றீர்கள்?

113. அர்ரஹீம் அல்கரீம் என்னும் பண்புகளைக் கொண்ட அல்லாஹ் இப்ராஹீம் நபியின் மகனை பலியாகக் கேட்டது அவன் பண்புகளுக்கு முரணாகப்படுகிறதே?

114. அல்லாஹ்விற்கு உதவிசெய்யுங்கள் என்றும் (47:7) அல்லாஹ் யாதொரு தேவையற்றவன் என்றும் (112:2) கூறி குர்ஆன் தனக்குத்தானே முரண்படுகிறதே?

115. அல்லாஹ்வின் ஆட்சி அகிலஉலகமெல்லாம் பரவியிருப்பது போன்றே சைத்தானின் செயல்களும் உலகெங்கும் பரவியிருப்பதைப் பார்க்கும் பொழுது சைத்தானின் சக்தி அல்லாஹ்வின் சக்திக்கு நிகராயிருப்பதாக எண்ணத் தோன்றுகிறதே?

116. முஹம்மது (ஸல்) இறந்து விட்டார்கள். ஈஸா (அலை) இயேசு இன்றுவரை உயிருடன் உள்ளார் எனில், முஹம்மது (ஸல்) நபியை விட இயேசு நாதர் மேலானவர் தானே?

117. மரணம் என்பது ஒரு முறை தானே! ஆனால் குர்ஆன், 'நீ எங்களை இருமுறை மரணமடையச் செய்தாய்' (40:11) என்கிறதே?

118. மனிதன் படைக்கப்பட்டது மண்ணிலிருந்து என்று சில இடத்திலும், (5:26) நீரிலிருந்து என்று சில இடத்திலும் (16:14, 36:77) இரத்தக் கட்டியிலிருந்து என்று சில இடத்திலும் (96:2) கூறுகிறதே! இது ஒன்றுக்கொன்று முரணாகத் தெரிகிறதே?

119. இறைவனைக் காணமுடியாது என்றும் (6:103, 42:51) அவர் அவனைக் கண்டார் என்றும் (81:23, 53:13) அன்றைய தினத்தில் சிலமுகங்கள் தம் இறைவனைப் பார்த்துக் கொண்டிருக்கும் (75:23) என்றும் குர்ஆன் கூறி, தனக்குத்தானே முரண்படுகிறதே?

120. குர்ஆன் வசனம் (2:34) இப்லீஸை வானவர் இனத்துடன் இணைத்தும், 18:50 குர்ஆன் வசனம் இப்லீஸை ஜீன் இனத்தைச் சார்ந்தவன் என்றும் கூறுகிறதே! இப்லீஸ் ஜின் இனமா? மலக்கு இனமா?

121. தீமைகள் அனைத்தும் சைத்தானிடமிருந்தே வருகிறது என்று (38:41) வசனமும் நம்மிடமிருந்தே என்று (4:79) வசனமும், அல்லாஹ்விடமிருந்தே என்று (4:78) வசனமும் கூறுகிறது, இதெல்லாம் முரண்படாமல் எப்படி ஒத்துப்போகும்?

122. அல்லாஹ் கருணையை தன்மீது கடமையாக்கிக்கொண்டான் என்னும் குர்ஆன் வசனத்திற்கு (6:12) முரணாக அல்லாஹ் தான் நாடியோரை வழிதவறச் செய்கிறான், தான் நாடியோருக்கு நேர்வழியையும் காண்பிக்கிறான் (6:35, 14:4) என்னும் வசனங்கள் அமைந்துள்ளது. இது தெளிவான முரண்பாடு அல்லவா?

123. உயிர்த்தெழும் நாளில் ஒருவருக்கொருவர் விசாரித்துக் கொள்ள மாட்டார்கள் என்று கூறும் (23:101) வசனத்திற்கு முரணாக அங்கே விசாரிப்புகள் நடக்கும் என்று (52:25, 37:25) சில வசனங்கள் கூறுகிறதே?

124. 'அல்லாஹ்வையன்றி உங்களுக்கு பாதுகாவலனோ உதவியாளனோ இல்லை'யென்று (2:107, 29:22) வசனங்கள் கூறுகிறது. மாறாக, உலக வாழ்விலும், மறுமைவாழ்விலும் நாங்கள்

உங்களுக்கு உதவியாளர்கள் என்று மலக்குகள் கூறுவதாக (41:31) வசனம் கூறுகிறதே. இது முரண்பாடு அல்லவா?

125. வானங்களிலும், பூமியிலும் இருப்பவை எல்லாம் அல்லாஹ்வுக்கே கீழ்படிந்து நடக்கின்றன என்று கூறும் (30:26) (3:83) வசனங்களுக்கு முரணாக சைத்தான் அல்லாஹ்வுக்கு கீழ்படிந்து நடக்கவில்லை என்று கூறும் (7:11) (15:28-31) (17:61) (20:116) (38:71-74) (18:50) வசனங்களும் உள்ளன. இன்னும் மனிதர்களும் கீழ்படிந்து நடக்கவில்லை என்று கூறும் வசனங்களும் ஏராளம் உண்டு. இது முரண்பாடு அல்லவா?

126. இணைவைக்கும் பெண்கள் ஈமான் கொள்ளும் வரை அவர்களை மணக்காதீர்கள் (2:221) என்னும் குர்ஆன் வசனமும் வேதம் கொடுக்கப்பட்ட (யூத கிறிஸ்தவ) பெண்களை மணமுடிப்பது உங்களுக்கு அனுமதிக்கப் பட்டுள்ளது (5:5) என்னும் குர்ஆன் வசனமும் ஒன்றுக்கொன்று முரண்படுகிறதே?

127. இந்த குர்ஆனை விளங்குவதற்காக நாம் எளிதாக்கியிருக்கிறோம் என்றும் குர்ஆன் கூறுகிறது அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் அதன் உண்மை விளக்கத்தை அறிய முடியாத முதஷாபிஹாத் வசனங்களும் உள்ளன என்றும் (3:7) குர்ஆன் கூறுகிறதே?

128. ஈஸா(அலை) அவர்களின் ஜனனம் குறித்து மர்யத்திடம் நற்செய்தியைக் கூறியது மலக்குகள் என்று குர்ஆனில் 3:45 வசனம் கூறுகிறது. ஆனால், ஒரு வானவர் மட்டுமே என்று 19:17-21 வசனங்கள் கூறுகிறது. இது தெளிவான முரண்பாடு அல்லவா?

129. இறைவனிடம் ஒரு நாளின் அளவு பூமியிலே 1000 ஆண்டுகளுக்கு சமம் என்று குர்ஆனில் (22:47,325) என்ற வசனங்கள் கூறியிருக்க, ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்கு சமம் என்று 70:4 வசனம் கூறுகிறது. இது தெளிவான முரண்பாடு அல்லவா?

130. குர்ஆனில் சில வசனங்களில் ஒரு சுவர்க்கம் என்றும் (உம் 39:73, 41:30, 57:2, 79:41) மற்ற சில வசனங்களில் பல சுவர்க்கங்கள் உண்டு என்றும் (18:31, 22:23, 35:33, 78:32) கூறுகிறதே, இது முரண்பாடு அல்லவா?

132. மறுமையில் மனிதர்கள் இரண்டு பகுதியினர்களாக பிரிக்கப்படுவர் என்று (90:17-20, 6-8) வசனங்களில் கூறுவதற்கு முரணாக மூன்று பகுதியினராக பிரிக்கப்படுவர் என்று (56:7) வசனம் கூறுகிறதே? இதன் விளக்கம் என்ன?

131. மனிதன் மரணமடையும் போது, அவன் உயிரை கைப்பற்ற வருபவர் மலக்குல் மவ்த் (32:11) என்றும், மலக்குகள் என்றும் (47:27) அல்லாஹ்வே என்றும் (39:42) கூறுகிறதே? இவ்வசனங்கள் ஒன்றிற்கொன்று முரண்படுகிறதே?

132. ஆகாயம் பூமி படைக்கப்பட்டது ஆறு நாட்களில் ஆகும் என்று கூறும் குர்ஆனிலேயே அல்லாஹ் ஒன்றை படைக்க வேண்டும் என்றால், ‘ஆகுக‘ என்றால், அது ஆகிவிடும் என்றும் கூறப்பட்டுள்ளதே, இது முரண்பாடு அல்லவா?

133. வானங்களா? பூமியா? எது முதலில் படைக்கப்பட்டது? முதலில் படைக்கப்பட்டது பூமியென்று 2:29 வசனமும், முதலில் வானங்களே என்று 79:27 வசனமும் கூறுகிறதே? இது தெளிவான முரண்பாடு அல்லவா?

134. வானங்களும் பூமியும் முதலில் ஒன்றாக இருந்தது. பின்னர் அது பிரிக்கப்பட்டது என்று (21:30) வசனம் கூற, அதற்கு முரணாக அவையிரண்டும் வேறுபட்டு நின்றது. பின் ஒன்றாக வந்தது என்று (41:11) வசனம் கூறுகிறது. அதை விளக்க முடியுமா?

135. அல்லாஹ் சிம்மாசனத்திலிருக்கிறான் என்று (57:4) வசனம் கூறுகிறது. அந்த சிம்மாசனம் நீரின் மீதுள்ளது என்று (11:7) வசனம் கூறுகிறது. இதற்கு முரணான வகையில் (50:16) வசனம் அவன் உங்களுடைய பிடரி நரம்பை விட மிகச் சமீபமாக இருக்கிறான் என்கிறது. இது முரண்பாடு அல்லவா?

(குறிப்பு: மேற்கண்ட வினாக்களுக்குரிய விளக்கங்களை "குர்ஆன் மீதான குற்றச்சாட்டுகளும் பதில்களும்" எனும் நூலில் காண்க.)

இதுபோன்ற அநேக குற்றச்சாட்டுகள் எழுவதற்குக்காரணம் இஸ்லாத்தை அதன் அடிப்படை ஆதாரங்களான குர்ஆன் ஹதீஸ் மூலமாக(மட்டும்) விளங்கிக் கொள்ளாததால் ஆகும்.

### அறிவார்ந்த விளக்கமும், அமைதியாக இருத்தலும்:

### இந்த 'தலாக்' குற்றச்சாட்டை எடுத்துக் கொள்ளுங்கள்

இந்த குற்றச்சாட்டிற்கு முக்கியக் காரணம் முஸ்லிம்களின் ஒரு சிலர், இஸ்லாத்தின் அடிப்படை ஆதாரங்களான குர்ஆன் ஹதீஸ் கூறும் 'தலாக்' (ஆண்கள் விவாகரத்து) 'குலா' (பெண்கள் செய்யும் விவாகரத்து) முறையில் விவாகரத்து செய்யாமல் சில உலமாக்களின் உபதேசத்தின் படியிலான (ஒரே நேரத்தில்) மூன்றுமுறை கூறி 'தலாக்' என விவாகரத்து செய்வதால் ஆகும். அது தான் இஸ்லாமிய 'ஷரியத்' என்று சில முஸ்லிம்கள் நம்புவதாலும் - அதன் அடிப்படையில் பிற மதத்தவர்களும் இஸ்லாத்தை விமர்சிக்கிறார்கள்.

அழைப்பாளர்கள் - இஸ்லாம் சொல்வதை நேராக எடுத்துச் சொல்ல வேண்டும். இஸ்லாத்தின் அடிப்படை ஆதாரங்களான குர்ஆன் ஹதீஸிற்கு எதிரான கருத்தை பெரும்பான்மை முஸ்லிம்கள் செய்து கொண்டிருக்கிறார்களே என்று முஸ்லிம்கள் பக்கம் நியாயப்படுத்தி பேசி இஸ்லாத்தைத் தோல்வியடையச் செய்துவிடாதீர்கள்.

மதத்தவர்களின் கேள்வி மூர்க்கத்தனமாக, முட்டாள் தனமாக, கோபத்தை தூண்டக்கூடியதாக இருந்தாலும், அதற்கு அன்பான முறையில் தெளிவான பதிலைக் கூறுங்கள். அன்றி, நாமும் கோபத்திற்கு அடிமையாகி விடக்கூடாது. எனவே, எப்போதும் இனிமையாக பதில் சொல்ல கற்றுக்கொள்ளுங்கள்.

பிறருடைய விமர்சனத்திற்குச் சரியான விளக்கம் கூறத் தெரியவில்லை யென்றால், தெரியவில்லை என்று கூறி விடுங்கள். நீங்கள் தர்க்க வாதத்தில் வெற்றிபெற வேண்டும் என்று அறிவற்ற பதிலைக் கூறி, தவறான விளக்கத்தால் இஸ்லாத்தைத் தோல்வியடையச் செய்யாதீர்கள்.

நீங்கள் அறியாததை அறிந்தவர்களிடம் கேட்டுவந்து மற்றவருக்கு விளக்குங்கள். எல்லாம் அறிந்தவன் அல்லாஹ் ஒருவன் தான் என்பதை எப்போதும் மனதில் வைத்துக்கொண்டு, குர்ஆன் கூறுவது போன்று,

அவர்களிடத்தில் மிக அழகிய முறையில் தர்க்கிப்பீராக (16:125)

முட்டாள் தனமாக தர்க்கிப்பதை விட மவுனமாக இருப்பதே நல்லதும். நாம் இஸ்லாத்திற்கு செய்யும் நன்மையும் ஆகும்.



### நன்மையைக் கூறி தீமையைத் தடுத்தல்:

இஸ்லாத்தின் மீதான குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்துவிட்டு இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும் விதமாக அழைப்பாளனின் உரையாடல் அல்லது உரை அமைந்திருப்பது சிறப்பாகும்.

'நன்மையும் தீமையும் சமமாக மாட்டா, நீங்கள் (தீமையை) நன்மையைக் கொண்டே தடுத்துக்கொள்வீராக! அப்பொழுது எவருக்கும் உமக்குமிடையே, பகைமை இருந்ததோ, அவர் உற்ற நண்பரே போல் ஆகிவிடுவார்.' (41:31) என்று அல்லாஹ் கூறுகிறான். ஆகவே முஸ்லிம் அல்லாதவர்கள் முன் நன்மையைக் கொண்டே தீமையைத் தடுக்கும் விதத்தில் நன்மையை எடுத்துரைத்து உரையாட வேண்டும். இதனால் இருவருக்கும் மத்தியில் அன்பான உறவுக்கு அது வழிவகுக்கிறது. இறுதிக் கட்டத்தில் தீயதை விமர்சித்து தீயதை தடுத்திட முன்வரலாம்.

துவக்கத்திலேயே தீமையைச் சுட்டிக்காட்டி குறை கூறினால், கேட்பவர்கள் எதிரியாகிவிடுகிறார்கள். குறையையே சொல்லிக் கொண்டிருந்தால், மாற்றார்கள் நம்மைவிட்டு ஒதுங்குகிறார்கள். வெறுக்கிறார்கள் ஆதலால், விமர்சனத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள். அதையும் இறுதியில் வைத்துக் கொள்ளுங்கள். அனுதாபத்துடன் நோக்குங்கள். அனுதாபத்துடன் பார்த்தால் அன்பு செலுத்துகிறார்கள். ஆகவே, அனுதாபத்துடன், அன்பு மலர்ந்த முகத்துடன், விவேகத்துடன் அழகிய உபதேசத்தைக் கொண்டு, இஸ்லாத்தின் பக்கம் அழைக்கவேண்டும்.

இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்கள்! முஆத் இப்னு ஜபல்(ரலி) அவர்களை இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள், யமன் தேசத்திற்கு அனுப்பிய போது, அவருக்கு இவ்வாறு உபதேசித்தார்கள்: நீர் வேதத்தையுடைய ஒரு சமுதாயத்திற்கு மத்தியில் செல்கிறீர். எனவே, முதன் முதலாக ஏகத்துவத்தின் பக்கம் அவர்களுக்கு அழைப்பு விடுவீராக. அதை அவர்கள் அறிந்து கொண்டால், அல்லாஹ் ஒரு இரவிலும் ஒரு பகலிலும் ஐந்து நேரத் தொழுகையைக் கடமையாக்கி இருக்கிறான் என்று எடுத்துச் சொல்லவும். (புகாரி)

முக்கியத்துவம் குறைந்த விஷயங்களை விட, இஸ்லாத்தின் அடிப்படை விஷயங்களை வைத்தே இஸ்லாத்தின் பால் அழைக்க வேண்டும். இஸ்லாம் ஏக இறைவனின் மார்க்கம், திருக்குர்ஆன் இறைவனின் இறுதி வேதம் என்பதற்கு ஆதாரமாக பகுத்தறிவு பூர்வமான, அறிவியல் பூர்வமான ஆதாரங்களை எடுத்துரைத்து உரையாடுங்கள்.

### ஏகத்துவத்தை பிற மதத்தினரிடம் அறிமுகப்படுத்தும் வழி:

இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையான ஏகத்துவம், தூதுத்துவம் மறுமை தத்துவங்களை விரிவாக எடுத்து வைத்து பேசும்போது, அத்துடன் இணைந்து போகும் இந்து மத வேதவரிகளையும், பைபிள் வசனங்களையும் இடையிடையே மேற்கோள் காட்டிப் பேசுங்கள். அவ்வாறு பேசும்போது அத்தியாய எண்களையும் வசன எண்களையும் தவறாமல் குறிப்பிட்டுப் பேசுங்கள். இது கேட்பவரின் கவனத்தை அதிகப்படுத்தி இஸ்லாத்தின் மீது தொடர்பை அதிகமாக்கும்.

ஒரேதெய்வமே சாத்தியமானதும், அறிவுப்பூர்வமானதும் ஆகும். மூன்று தெய்வமோ (திரித்துவம்) பல தெய்வமோ சாத்தியமானதுமல்ல, அறிவுப் பூர்வமானதுமல்ல என்பதைப் பிறமதத்தவர்களின் வேதவாக்கிய ஆதாரங்களைக் கொண்டு பேசுவது மிகவும் பயனுடையதாக இருக்கும்.

பிறமத வேதங்களிலிருந்து வேதவசனங்களை எடுத்து வைப்பதால், அவர்களுடைய தாழ்வு மனப்பான்மையைப் போக்கும். பல தெய்வக் கொள்கையுடையவர்களுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை இருக்கும், ஏகதெய்வக் கொள்கை உங்கள் மத கிரந்தங்களிலும் இருக்கிறது என்று கூறும் பொழுது, அவர்களுக்குச் சற்று தெம்பு ஏற்படும். அதேசமயம், அப்படியானால் அதைப் பின்பற்றி நாங்கள் வாழ்கிறோம் என்று அவர்கள் கூறி, பிரிந்து செல்லும் நிலையில் உங்கள் உரை அமைந்துவிடக்கூடாது.

ஏக தெய்வக் கொள்கையுடன் பல தெய்வக் கொள்கைக்கான ஆதாரங்களை இறைவேதம் என்னும் பெயரில் மனிதர்கள் நுழைத்துவிட்டார்கள். இதனால் அவ்வேதங்கள் பரிசுத்த வேதம் என்னும் தகுதியை இழந்து விட்டது எனும் வாதத்தை இஸ்லாத்தின் பால் அழைக்கும் போது வெளிப்படுத்தியாக வேண்டும்.

நமது ஏகத்துவ (ஓரிறைக்) கொள்கை விளக்கத்தைக் கேட்கிற ஒரு கிறித்துவர் பைபிளின்படி நான் ஏகஇறைவனையே வணங்குகிறேன். இயேசுவை இனி வணங்கமாட்டேன்! என்று கூறி பிரியும் நிலையில் அல்லாமல் இறைவனின் மார்க்கமான இஸ்லாத்தின் அடிப்படையில் ஏக இறைவனை வணங்குவேன் என்று கூறிடும் நிலையில் நம்முடைய உரை இருக்கவேண்டும்.

பல சந்தர்ப்பங்களில் நாம் செய்யும் தவறு என்னவென்றால், உங்கள் கொள்கைக் கோட்பாடுகள் சரியில்லை. அதில் முரண்பாடுள்ளது என்று கூறும்றோம். ஆனால் சரியானது. தெளிவானது, முரண்பாடற்றது இஸ்லாமிய மார்க்கம் என்று கூறிடத் தவறி விடுகிறோம். இதனால் அந்த மனிதன் நாத்திகம் பக்கம் சாய்கிறான். அதனால் பிறமதத்தின் குறைகளைச் சுட்டிக்காட்டும் போது இஸ்லாத்தின் நிறைகளைச் சொல்லியே ஆகவேண்டும்.

கிறிஸ்தவர்களிடம் விவாதிக்கும் பொழுது அவர்கள் வேத வசனங்களை அவர்கள் நம்பிக்கைக்கு எதிராகக் காட்டவேண்டும். இதுவே நம் விமர்சனத்தில் கடைபிடிக்க வேண்டிய அம்சங்களில் முக்கியமானதாகும்.

இஸ்லாத்தின் சிறப்புக்களை, அதன் அடிப்படை ஆதாரங்களான குர்ஆன் ஹதீஸ்கள் வழியாக பேசும்போது, விஞ்ஞானம், பொருளாதாரம் சமூகவியல், குடும்பவியல், போன்ற துறைகளுக்கு இஸ்லாம் கூறும் தீர்வுகள்பற்றி எடுத்துரைத்துப் பேசும் போது மற்றகொள்கைகளுடன் (இஸங்களோடு,) ஒப்பிட்டுப் பேசுங்கள். இன்னும் எப்படியெல்லாம் இஸ்லாத்தை அதன் தூயவடிவில் எடுத்துரைத்து விளக்க முடியுமோ அப்படியெல்லாம் விளக்கிய பின்பு, இறுதிக்கட்டமாகவே பிற கொள்கையை விமர்சித்து உண்மை நிலை எடுத்துக் கூறலாம்.

### அழைப்புப்பணி பலனளிக்காத நிலையில்:

தீமையைத் தடுத்திட நினைக்கும் போது நாம் முதலில் நன்மையைக் கொண்டே தடுத்திட முற்படவேண்டும் (பார்க்க 41:34) அது முடியாத பட்சத்தில் தீமையைச் சுட்டிக்காட்டிக் கூறவேண்டும். ஆகவே, தீமையை விமர்சிக்கக் கூடிய நிர்பந்தங்களுக்கு ஆளாகும் போது அதன் உச்சவரம்பு என்ன என்பதை இப்ராஹீம் நபி தன் சமூகத்தாரிடம் சலித்துக் கொண்டதை எடுத்துக்கூறும் இறைவசனம் மூலம் அறியமுடிகிறது.

“சீ உங்களுக்கும், நீங்கள் வணங்குகிற அல்லாஹ் அல்லாதவற்றிற்கும் (கேடு தான்) நீங்கள் இதனை அறியவில்லையா?“ (என இப்ராஹீம் கூறினார்) 21:67

இஸ்லாத்தை பலமுறை பல பரிமாணங்களில் எடுத்து வைத்தும் அதனை விளங்காமல் கண்ணிருந்தும் குருடனாக, காதிருந்தும் செவிடனாக உள்ளவர்களிடம் அவர் சார்ந்த நம்பிக்கையை விமர்சிக்கலாம். இத்தகைய விமர்சனங்களை தனி உரையாடலில் வைத்துக்கொள்வதே சிறப்பாகும் கூட்டு உரையாடலில், பொது மேடைகளில் மாற்றார்களின் கொள்கைகளை, கடவுளர்களை விமர்சிப்பது (ஹிக்மத்)விவேகமாகாது. ஒரு அவையில் இஸ்லாத்தை அறியாதவர், இஸ்லாத்தை அறிந்து கொள்ளும் ஆவல் உடையவர், இஸ்லாத்தை தவறாக விளங்கிக் கொண்டவர் என பலர் கலந்திருக்க வாய்ப்பிருக்கிறது. இஸ்லாத்தை அறியவந்தவர்கள் தங்கள் மதம் விமர்சிக்கப்படுவதை விரும்ப மாட்டார்கள். இன்னும் இஸ்லாத்தின் மீது அவர்கள் சாட்டிய தவறான குற்றச்சாட்டுகளுக்கு நியாயமான விளக்கங்களை அறியாதவர் களுக்கு ஏற்கனவே மனதிலுள்ள குற்றச்சாட்டுகளில் இவ்விமர்சனமும் வலுவான இடத்தைப் பிடித்துக் கொள்ளும்.

### கிறித்தவர்களிடம் இறை வாக்குப் பற்றி விவாதிக்க:

இந்து மத விசுவாசமானது அற்புதங்களின் அடிப்படையிலும், முன்னோர் மீதுள்ள குருட்டு பக்தியிலும் சடங்கு சம்பிரதாயங்களின் அடிப்படையிலும் அமைந்திருக்கிறது. ஆனால் அற்புதங்கள் இறைவிசுவாசத்தின் அளவுகோல் அல்ல என்று இயேசு கூறுவதாக பைபிளின் கூற்றை மத்தேயு 24:24 மத்தேயு 7:21, 22, 23) எடுத்து வைத்துப் பேசலாம். இன்னும் கிறிஸ்தவர்களின் வேதமான பைபிளில் முரண்பாடுகளை ஆதாரத்தோடு விளக்கி அது இறைவாக்கோடு இயேசுவின் வாக்கும் இன்னும் பல மனிதர்களின் வாக்கும் கலந்து, அது பரிசுத்த தன்மையை இழந்துவிட்டது என்பதை ஆதாரத்துடன் எடுத்து வைத்துப் பேசலாம்.

இறைவாக்கு:

நான், நானே கர்த்தர், என்னையல்லாமல் ரட்சகர் இல்லை. (ஏசாயா 43:11)

தூதர்வாக்கு:

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால், இஸ்ரவேலே கேள்! நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். (மாற்கு 12:29)

வரலாற்று ஆசிரியரின் வாக்கு:

மறுநாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்து புறப்பட்டு வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று, அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்க வந்தார். அத்திப்பழ காலமாயிராத படியால், அவர் அதனிடத்தில் வந்தபோது அதில் இலைகளையல்லாது, வேறொன்றையும் காணவில்லை. (மாற்கு 11:13, 14)

அறியப்படாதவரின் வாக்கு:

இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு போகையில், ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயு என்னும் ஒரு மனுஷனைக்கண்டு, ‘எனக்குப் பின் வா!‘ என்றார். அவன் எழுந்து அவருக்குப் பின் சென்றான். (மத்தேயு 9:9)

காமுகனின் வாக்கு:

நீ ரூபவதி, என் பிரியமே! நீ ரூபவதி உன் முக்காட்டின் நடுவே உன் கண்கள் புறாக்கண்களாயிருக்கிறது் உன் கூந்தல் கீலேயாத் மலையில் தழைமேயும் வெள்ளாட்டு மந்தையைப் போலிருக்கிறது...... (உன்னதப்பாட்டு 4:1 - 16) ....................................... (எசேக்கியேல் 23:1 - 43)

நிர்வாணப் பிரியனின் வாக்கு:

தானும் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போட்டு, சாமுவேலுக்கு முன்பாகத் தீர்க்கதரிசனம் சொல்லி, அன்று பகல் முழுவதும் இராமுழுவதும் வஸ்திரம் இல்லாமல் விழுந்து கிடந்தான், ஆகையினாலே சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ என்பார்கள். ( 1 சாமுவேல் 19:24)

1. ராஜாவாகிய எசேக்கியா அதைக்கேட்டபோது தன்வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டு உடுத்திக் கொண்டு, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து,

2. அரண்மனை விசாரிப்புக்காரனாகிய எலியாக்கீமையும், சம்பிரதியாகிய செப்னாவையும் ஆசாரியர்களின் மூப்பரையும் ஆமோத்தின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசியினிடத்துக்கு இரட்டு உடுத்திக் கொண்டவர்களாக அனுப்பினான்.

3. இவர்கள் அவனை நோக்கி: இந்த நாள் நெருக்கமும் கண்டிதமும் தூஷணமும் அனுபவிக்கிற நாள் பிள்ளைபேறு நோக்கியிருக்கிறது, பெறவோ பெலனில்லை......... (2 இராஜாக்கள் 19-ம் அத்தியாயம்) (வசனம் 1,2,3)

ஆக, பைபிள் இறைவனுடைய வேதம் என்று கூறுவது பொருந்தாது. இறைவனைப் பற்றிய நூல் என்று வேண்டுமானால் கூறிக்கொள்ளலாம். இன்னும் இயேசு மீதுகொண்ட வரம்பு மீறிய பாசத்தால் - தனி மனித வழிபாட்டால் உருவாகிய இயேசு கடவுள்! (?) கடவுளின் குமாரர்! (?) என்னும் தத்துவங்கள் இயேசுவிற்கோ பைபிளுக்கோ உடன்பாடானது அல்ல என்பதை பைபிள் ஆதாரத்தோடு விவரிக்கவும். மாற்றுமதங்களை விமர்சனம் செய்வது கண்ணியமான முறையில், ஆரோக்கியமான நிலையில், சிறந்த பேச்சாளர்கள் மூலமாக செய்வதே சிறப்பு. பொது மேடைகளிலும் கூட்டு உரையாடலிலும் விமர்சனங்களைத் தவிர்ப்பது நலம். தனி உரையாடலில் விமர்சனத்தை இறுதிக் கட்டத்தில் வைத்துக்கொள்வதே நல்லது. சிலர் இஸ்லாமிய அறிமுகக் கூட்டத்திலேயே பிள்ளையார் பால்குடித்தார், இராமர் சோமபானம் குடித்தார் என்று விமர்சிக்க ஆரம்பித்து விடுகின்றனர். இவ்வகையான போக்கு நல்விளைவைத் தராது.

### தவறான அழைப்பு முறையும் - தக்க ஏற்பாட்டு முறையும்:

சில பேச்சாளர்கள் அழைப்புப்பணி என்றாலே பிறமதங்களை, கொள்கைகளை, கடவுள்களை விமர்சிப்பது தான் என்று கருதி பேசமுற்படு கின்றனர். இந்த போக்கு மற்ற மதத்தினரை இஸ்லாத்தை விட்டு தூரமாக்கவே செய்யும் என்பதை அழைப்பாளர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இஸ்லாத்தோடு மற்ற மதங்களை ஒப்பிட்டுப் பேசுவது வேறு, மற்ற மதங்களை விமர்சிப்பது என்பது வேறு ஆகும்.

நபி(ஸல்) அவர்கள் யூத கிறிஸ்தவர்களை விவாதத்திற்கு அழைத்த வரலாற்று விவரங்களையும், நடத்திய முறைகளையும் நாம் அறிந்திருக்க வேண்டும். நபிவழியின் அடிப்படையில் பிறகொள்கைகளை ஒப்பிட்டும், விமர்சித்தும் விவாதம் செய்வதற்கு கருத்தரங்கு, பட்டிமன்றம், சொற்போர் போன்ற விஷேச நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தால், அங்கு இரு மாறுபட்ட கருத்துடையவர் ஒரே மேடையில் விவாதிப்பதால் கேள்விக்கு பதிலளிக்கவும் விளக்கமளிக்கவும் வாய்ப்பிருக்கிறது. இதனால்

பார்வையாளர்கள் ஒருவகை முதிர்ந்த மனநிலையில், அக்கரையோடும் நடுநிலையோடும் இருந்து கேட்க வாய்ப்பிருக்கிறது. அதனால் அங்கு விமர்சனம் விபரீத விளைவை ஏற்படுத்த வாய்ப்பில்லை.



நிச்சயமாக நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவன் என்பதற்காக அல்லாமல் எனக்கு வஹீ அறிவிக்கப்படவில்லை. 38:70

நன்மையை மட்டும் எடுத்துக்கூறி வாய்மூடிவிடாமல் மற்றவர்களிடம் மத கொள்கை ரீதியாக, சமூக, அறிவியல், பொருளாதார ரீதியாக ஏற்பட்டுள்ள அனைத்துக் கெடுதிகளையும் விவேகத்தோடு, அழகிய உபதேசத்தின் மூலமாக எடுத்துக்கூறி அச்சமூட்டி எச்சரிக்கை செய்ய வேண்டும். காலங்காலமாக தீயவழிமுறையிலேயே ஊறிப்போய், தீமைகயை நன்மையென்றே கருதி கிடக்கும் மக்களை, அழைப்பாளன் நிதானமாக அனும், சத்தியத்தை உணரும் வரை தொடர்ந்து பிரச்சாரம் செய்திடல் வேண்டும்.

'இலகுவான பாதையை நாம் உமக்கு ஏற்படுத்தித் தருவோம். எனவே அறிவுரை பலன் தரும் எனில், அறிவுரை வழங்குவீராக. எவர் அஞ்சுகிறாரோ, அவர் அறிவுரையை ஏற்றுக் கொள்வர். (87:8,9)

உபதேசம் செய்வீராக (87: 8,9) என்னும் இறைக்கட்டளையை ஏற்று, நபிமார்கள் விட்டுச்சென்ற நன்மார்க்கத்தின் பக்கம் அழைக்கும் பணியை நமது அன்றாட வாழ்வின் செயல்பாட்டுடன் எடுத்தியம்பிக் கொண்டே பயணத்தைத் தொடர்வோம்.

மரணம் நம்மைத் தழுவும் வரை இஸ்லாத்தைத் தழுவும்படி அழைப்போம்

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் பிரார்த்தித்ததாக ஸாத் பின் தாபித்(ரழி) அறிவித்த செய்தி அஹ்மதில் பதிவாகியுள்ளது.

"நான் சொல்வதைக் கேட்டு, அதனை மனதில் நிறுத்தி பின்னர் பிறருக்கு எடுத்துரைப்பவனை புதுமையும் ஒளியுமுடையவனாக (அல்லாஹ்) ஆக்குவானாக."